

V. Thinakaran
01042009

# ஏவி விடப்பட்ட கொலையாளி

திசேரா

sirahununi

# aevi vidappatta kolaiyaali

© : s. thiyagasegaran (thisera)

first edition : december 2008

pages : 75

designed and published by : sirahununi, colombo, srilanka

email : sirahununi@gmail.com, sirahununi@sltnet.lk

illustration : k.sasikumar

cover art : s.naleem

print : page & image

ISBN : 978-955-0054-01-5

price : slr. 150.00

all rights reserved. no part of this publication may be reproduced, stored or introduced into a retrieval system, or transmitted, in any form, or by any means (electronic, machanical, photocopying, recording or otherwise) without the prior permission of the author.

இது

**என். ஆத்மா**

மற்றும்

**ப்ரியா**

**எம்.ரி. சகி**

**ஜீ.எம். ருத்ரா**

ஆகியோருக்கு

**திசேரா**

கபாலபதி

வெள்ளைத்தோல் வீரர்கள்

ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புகள்

office:

34, rathniligala, devisiripura,
talawakelle, srilanka.

residence:

navaratnaraja vidyalaya road,
arayampathy-02, srilanka.

email: srthisera@gmail.com


# 01. பாம்பு மாநாடு

மினி தான் என்னிடம் முதலில் சொன்னாள், "இது போன்ற மாநாடுகளை நீ எப்போதும் கண்டிருக்க மாட்டாய்". புறப்பட்டுப் போய் பார்க்கச் சொல்லி விட்டு சைக்கிளை மிதித்து அவளின் பாதையில், அவளுக்குரிய வேகத்துடன் ஊர்ந்து போனாள்.

அவள் வரவு குறித்து அம்மா என்னிடம் கூற முன்னர் 'டொல்பின்' போன்ற எனது நீர் மூழ்கிக் கப்பலின் பணி களை முடித்து விட்டு சகல இயந்திரங்களதும் இயக்கம் குறித்து திருப்திப்பட்டுக் கொண்டேன். அன்றைய தினமே அதை வெள்ளோட்டத்துக்கு இறக்குவதென முடிவு பண்ணும் போது அவளும், ராகவனும் ஞாபகத்துள் வந்து அவர்களும் வருவதாக கூறவும், அவர்கள் மீதிருந்த ஈர்ப்பினால் நானும் உடன்பட்டுக் கொண்டு சரியாக 14.00 மணிக்கு புறப்படுவ தென தீர்மானித்துக் கொண்டதுடன், திட்டத்தின் ரகசியம் பேணல் குறித்துக் கதைக்கும்போதுதான் அம்மா அங்கிருந்து என்னை மீட்டெடுத்து மினியின் வரவை அறிவித்தாள்.

திடீரெனக் கூட்டப்பட்ட மாநாடு, தேசியம் சார்ந்தோ பிர தேசம் சார்ந்தோ இருந்திருக்கலாம். அவளது தகவலின்படி அந்த இடம் முழுவதும் அவை நிரம்பி இருப்பதான தகவல் மட்டுமே. ஆயிரம் அல்லது அதனை அண்மித்த தொகை யாக இருக்கலாம் என்ற எண்ணத்துடன் மேற்சட்டையை அணிந்து தயாராகையில், எனது பகற் கனவு குறித்து அம்மா முணுமுணுத்துக் கொண்டிருந்தாள் - எப்போதை யும் போல, கனவுகளுள் என் அறிவு வளர்ந்து பெருகுவது குறித்து இதுவரை அவர்களுக்கு எந்த விடயமும் அறிவிக்கப்படவில்லை. நான் களைப்பைப் போக்க அல்லது சோம்பலுக்காகக் கண்ணை மூடி உறங்கிக் கிடக்கிறேன் என அவர்கள் எண்ணி இருக்கக்கூடும்.





அதனால்தான் தூக்கத்தைக் கலைத்தும் - கலையும் நேரங்களிலும் அவள் திட்டிக் கொண்டே இருப்பாள். நான் விஞ்ஞானியாக உலா வரும் ரகசியம் அவளுக்கு தெரிந் திருந்தால் சந்தோசப்படுவாள். சைக்கிளைத் தள்ளிச் சென்று மிதிக்கத் தொடங்கினேன்.

எனது ஆரம்பகால சைக்கிள் பயணத்தில் இந்த ஏற்றம் ஒரு சவாலாகவே இருந்தது - பாலத்துக்காக பாதை உயர்த்தப்பட்டு கிடைப்பாதையுடன் சரிவை உண்டாக்கி இருந்தது. வரும் போது சைக்கிளை மிதிக்காமலேயே நீண்ட தூரம் பயணிக்கக்கூடிய சுகமும் இருந்தது. இப்போது அவ்வாறு இல்லாவிட்டாலும் மற்றைய பாதைகளுக்கான மிதிப்பை விட இதற்கு அதிகமாகவே நெற்றியும், மூக்கும் ஈரமாகும். இன்று ஆர்வம் வேகத்தை அதிகமாக்கி இருந்ததால் அவை சொட்டிக் கொண்டு இருந்தன. மோட்டார் சைக்கிள்காரன் ஒருவன் நான் சாவதற்கு போய்க் கொண்டிருப்பதாக திட்டி விட்டுச் சென்றான். ஒருவர் வழியில் மற்றவர் நுழைகையில் அது சாதாரணமானதுதான். அவன் வேகம் அவனுக்கு சரியானது என்றால் எனக்கு என் வேகம் சரியானது தான்.

பாலம் முழுவதும் மக்கள் ஒருவரை ஒருவர் உரசிக் கொண்டு நின்றார்கள். இந்தப் பாலத்தைக் கடக்க நேர்ந்த இலட்சக்கணக்கான தடவைகளில் எந்த வேளையிலும் இது மாதிரியான நெரிசல் நிறைந்த பாலத்தைக் கண்டதில்லை. முன்னர் ஒரு முறை பாலத்திலிருந்து ஒருவர் கீழே குதித்து தற்கொலை செய்து கொண்ட போதுகூட அவரின் உடலைப் பார்க்க இத்தனை கூட்டம் நிற்கவில்லை. எங்கள் நாட்டின் மிக நீளமான பாலமாக இதுதான் திகழ்ந்தது, இதற்குப் போட்டியாக இன்னொன்று கட்டப்படும் வரை. போர்த்துக் கேயரோ, ஒல்லாந்தரோ சரியான மறதி எனக்கு. இரு நிலப்பரப்புக்களையும் இணைத்து தரை வழிப் போக்கு வரத்துக்கு இதனை கட்டி இருந்தார்களாம். 150-200 மீற்றர் நீளமான பாலத்தைக் கடந்து இரு ஓரங்களிலும் இருந்த



'கொங்க்றீட்' வேலிப் பகுதிகளிலும் இந்த அதிசயத்தை வியந்து கொண்டிருந்தார்கள்.

சாலைப் போக்குவரத்து விதியை மீறாமல் எனக்கான இடது புறத்தால் மெதுவாக மிதித்து - யாரையும் இடித்து விடாமல் இருப்பதில் கவனத்தைச் செலுத்தினேன். ஆனாலும் உரசிக் கொள்ள நேர்ந்த இருவரைப் பார்த்ததும் பல்லைக் காட்டிக் கொண்டு, ஒரு ஓரத்தில் என் வாகனத்தை - சைக்கிளை பூட்டி விட்டு, நெரிசலுள் மெதுவாக நுழைந்து பாலமும் வீதியும் ஒப்பந்தம் செய்துள்ள பகுதியின் இடது புறத்தில் நின்று கொண்டேன். வலது புறத்தில் பச்சைகள் கலப்புற்ற பாதுகாப்புக் கூடாரம் உள்ளதால் அங்கு நிற்க முடியாது.

யாரும் தங்கள் தங்கள் வாய்களை மூடிக்கொண்டதாக இல்லை. குரல்வளை அதிர்ந்து நாக்கைத் தடவி வார்த்தை களாய் நீண்டு கொண்டே இருந்தது.

"அது சாரை"

"அந்தா விரியன்"

"கருநாகமும் இருக்கும் போல"

காதுள் நுழைந்த அபிப்பிராயங்களை கேட்ட வண்ணமே வாவியை எட்டிப் பார்க்கின்றேன்.

பாம்புகள் பிணைந்து கட்டித் தழுவிய வண்ணம் நெளிந்து கொண்டிருந்தன. இது பெரிய மாநாடாய் இருக்க வேண்டும். அத்தனையும் ஒன்று கூடி இருந்தன. உள்ளங் கையில் பத்துக்கு அதிகமான மண் புழுக்களை நெளிய விட்டதுபோல ஒன்றின் மேல் ஒன்றாக ஊர்ந்து சறுக்கி விழுந்து வாவியை சலனப்படுத்தி அசைத்துக் கொண்டிருந் தன. உயிரொடுங்கி- விரிந்து முழுமையுறா சலனத்தை முளைவிடச் செய்தன. அரூபமாய் எழுந்தவற்றினை ரூப மாக்கி எண்ணங்களை அலைய விட கூட்டத்துள் பார்வைப் புலத்தை நெளிய விடுகையில் மூன்று தலை தள்ளி வாய் பிளந்து வேறெதையும் நினைக்க மறந்து மாநாட்டுள் புள்ளியாய் கலந்து நின்றான் இராகவன்.

கைகளைத் தட்டி, வாயால் சீட்டி ஊதி அருகில் வரவழைத்துக் கொண்டு சர்ப்ப மாநாடு குறித்து உரையாடத் தொடங்கினேன். சந்தனக்காடு, நாகரத்தினம், ஐந்து தலை நாகம் எல்லாம் இடையுள் நுழைந்து போயின. எங்கு தொடங்கினோம், எங்கு போய்க்கொண்டிருக்கின்றோம் என்பது தெரியாமல் தொடர்ந்து கொண்டிருந்த உரையாடலில் அதன் எண்ணிக்கை பற்றியதான கணித்தல் வந்தது.

பாலம் 150 மீற்றர் எனவும், பாம்புக் கூட்டத்தின் மொத்த நீளம் 200 மீற்றர் எனவும் கொள்வோமானால் ஒரு சதுர மீற்றருக்கு 100 என எடுத்தாலும் 30,000 பாம்புகள். இங்கு இன்னமும் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். இவற்றைக் கனவளவாகப் பார்க்க வேண்டும். ஏனென்பதை நீ அறிவாய். எப்படியாகிலும் 50,000 சர்ப்பங்களைக் கொண்ட மாநாடாய் இருக்கும்.

அவன் கணிதத்தில் பத்துப் புள்ளிகளை மட்டும் தவற விட்டவன் என்ற அடிப்படையில் எனது கூற்றை ஏற்றுக் கொண்டாலும், இது மாநாடு அல்ல என்பதைக் கூர்ந்து அவதானித்தால் நீ கண்டு கொள்வாய். இவை எல்லாம் எங்கோ யாத்திரையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன அல்லது சென்று கொண்டிருக்கின்றன. இப்போதைய நிலவரத்தின்படி நான் வரும்போது இருந்ததை விட, பத்து மீற்றரை விட அதிகளவான தூரம் முன்னேறி இருக்கின்றன.

எங்கள் ஊகங்கள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அவை தங்கள் திசையில் நகர்ந்து நீரை அசைத்துக் கொண்டிருந்தன.



## 02. இழுபட்ட புகைப்படம்

அன்றைய நாளில் இருள் கவியத் தொடங்கிய பொழுதில் முன்னெப்போதையும் விட வீட்டினுள் வேகமாய் நுழைந்த அப்பா, தனது கையில் அதிசயமான படங்கள் இருப்பதாகவும், அவற்றைப் பார்க்க வருமாறும் அழைத்துச் சத்தம் போட்டார். அவரின் முகத்தில் சிறிது படபடப்பு மின்னல் வெட்டாய் ஓடியது.

வெளியில் சென்று வீடு திரும்பும் ஒவ்வொரு முறையும் வாசற் கதவைத் திறந்து சைக்கிளை உள்ளே செலுத்தி கதவை மூடி விட்டு வரும் அவரிடம் இன்றைக்கு அந்தப் பக்குவம் காணாமல் போயிருந்தது. வண்டி வெளியில் வேலியிலேயே சாய்ந்து கிடந்தது பூட்டப்படாமல்.

தான் தனது நண்பர்களுடன் கோயிலுக்குச் சென்றிருந்த நேரம் எடுக்கப்பட்டவை என சில புகைப்படங்களை எடுத்துக் காட்டினார். முதலாவது படத்தைப் பறித்தெடுத்த அக்கா "ஒன்றும் தெரியவில்லை. அப்பாவுக்கு இன்னமும் படம் எடுக்கத் தெரியாது" என்னிடம் நீட்டினாள். அதில் ஒளி மேல் நோக்கி இழுபட்டு இருந்ததால் படம் தெளிவின்றி சலனமாக இருந்தது. மற்றையதுவும் அப்படியே இருப்பதாக அம்மா தந்தாள்.

"அதுதான் அதிசயம். இந்தப் படங்கள் மட்டுமல்ல அன்றைய தினமும் அதற்கு அண்டிய தினங்களிலும் மாலை வேளையில் எடுக்கப்பட்ட படங்கள் எல்லாம் இப்படித்தான் உள்ளன" என்ற அப்பா சகல படங்களையும் பரப்பி வைத்துக் காட்சிப்படுத்தினார். எல்லாவற்றிலும் மின் விளக்கு ஒளி மேல் நோக்கி இழுபட்டுச் சென்ற வண்ணம் இருந்தது. இவை தனக்குக் காலையிலேயே கிடைத்தாலும் இவை பற்றிய கலந்துரையாடலிலும், இதைப் போல இருந்த இன்னும் பல படங்களையும் தேடிக் கண்டு பிடித்து அவற்றைப் பார்த்துவிட்டு வருவதிலும் பல மணி நேரங்கள் கரைந்து போனதாம்.



மேல் நோக்கி ஒளியை இழுக்கக்கூடிய ஒரு வித ஈர்ப்புச் சக்தியினால்தான் இது நடந்திருக்கக்கூடும். அது புவி யீர்ப்பைவிட அதிகளவு சக்தி கொண்ட ஒளியீர்ப்பு. கீற்றுக் களை அண்ட வெளிக்கு இழுத்துப் பயணித்தது. காலநிலை மாற்றத்தின் காரணமாக இது ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதிய வேளையில்தான் ஒருவன் "அது சக்தி வாய்ந்த கோயில் எனவும் அதன் குடமுழுக்கைக் காண அனைத்துச் சித்தர்களும் ஒன்றுகூடி வானில் நின்றிருந்ததனால் அவர்களது ஒன்று திரண்ட சக்தியே ஒளியை மேல் நோக்கி இழுத்திருக்கிறது" என்றானாம்.

இதைக் கேட்டுக்கொண்டே கண்ணாடியை சரி செய்து புகைப்படமொன்றைக் கையில் எடுத்துக் கொண்டே, இது தெய்வச் செயலே தவிர எதுவுமில்லை. அண்மைய நாட்க ளாகவே தெய்வ அனுக்கிரகம் இந்த ஊருக்குக் கிடைக்கத் தொடங்கிவிட்டதைத் தான் உணர்ந்ததாகக் கூறிய அம்மம்மா, இப்படிப்பட்ட பல காட்சிகள் தன்னைப் போன்ற (வயது கூடிய அல்லது பக்தி நிறைந்த என்பதை உணர்த்த விரும்புகிறாள் என நினைக்கிறேன்) பலரது கனவுகளில் வருவதைத் தாங்கள் சந்திக்கும் வேளையில் கதைத்துக் கொள்வதாகவும் பெரும்பாலும் இக்கதையாடல் கோயிலி லேயே நடப்பதாகவும் கூறினாள்.

எதையும் "அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது" என அப்பா மறுதலித்தபோது, அம்மாவும், அக்காவும் மெதுவாக அடுப்பறைப் பக்கம் மறைந்து போனார்கள். தாங்கள் சிலர் சேர்ந்து இந்த அதிசயம் குறித்து பலருக்கு அறியத் தந்திருப்பதாகவும் அவர்களின் அறிக்கையின் பின் இது குறித்து முடிவுகள் எதையாவது எடுத்துக் கொள்ளலாம் என்று விட்டு அப்பா சைக்கிளை உள்ளே கொண்டு வரச் சென்றார்.

அப்போதைக்கு அது வீட்டளவில் நின்று போனாலும் ஊர் முழுவதும் கதைக்கப்பட்டுக் கொண்டே இருந்தது.

## 03. சந்தனக் காடு

பகல் இரவு எதுவித வேறுபாடுமின்றி கனவு முழுவது மான ஆக்கிரமிப்பில் சர்ப்பம் ஈடுபட்டிருந்தது. அது நீடித்திருந்த நாட்களின் எண்ணிக்கையை வரையறுக்க முடியாது. நேற்றும் இன்றைய காலைக் கனவிலும்கூட அதுதான் வந்தது.

எங்களது நீர்மூழ்கியின் மேல் கட்டுமானத்தை அவதானித்துக் கொண்டிருந்த வேளையில் கரு மேகம் சூரியனை மறைப்பதைப்போல இருள் நிரம்பியது. வானம் முழுவதும் இறக்கை முளைத்திருந்த பாம்புகள் பறந்து கொண்டிருந்தன. திடீரென தாழ்வாகப் பறந்து வந்த ஒரு பாம்பு தலையாலும், இறக்கையாலும் என்னை அழைத்தது.

என் மயிர்கள் சிலிர்த்துக் கொண்டன. இரு தோள் பட்டை களிலும் ஒரு வித உறுத்தல். இரு கைகளின் மோதிர விரலும் சிறுவிரலும் பிரிவுபட்டு அக்குள் பகுதி வரையான நீண்ட பகுதி ஒரு கை போல கீழ் நோக்கி வந்து உடலுடன் ஒட்டிக் கொண்டது. கைக்கும், பிரிந்த பகுதிக்கும் இடையில் தோலும், நரம்புகளும் இழுபட்டு, கை, இறக்கைகள் போல ஆனது. கைகளை அசைக்கும் போது உடலின் நிறை குறைந்து மேல் நோக்கி பறக்கலானேன். வேகமாக அசைக்கையில் இன்னமும் உந்தப்பட்டு காற்றில் மிதந்த வண்ணமே பாம்புக் கூட்டத்தைத் தொடர்ந்து பறந்தேன். பின்னால் இருந்து அருகில் வந்த மினி இறக்கையை அசைத்த வண்ணமே என்னைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

கடற்கரை ஓரமாக ரோகினி, சந்துரு, அபி, பவி, குமார், ருதி எல்லோரும் புழுக்களாகி விளையாடிக் கொண்டிருந் தார்கள். என்ன விளையாட்டென இனங்கண்டு கொள்ள முடியாத உயரத்தில் நாங்கள் எங்களைப் பார்த்து உடலசைத்து வழியனுப்புவது போலிருந்தது.

ஏழு கடல் தாண்டிப் போனோம். தூரத்தே நிலத்தி லிருந்து ஒளிக்கற்றைகள் வானை நோக்கிப் பாய்ச்சப்பட்டுக்





கொண்டிருந்த மரங்கள் அடர்ந்த தீவுக்குள் அவை தரையிறங்கின. நாங்களும் அங்கேதான் இறங்கினோம்.

உடலைக் குளிரப் பண்ணும் சுகந்தம் எங்கும் நிறைந்திருந்தது. அது சந்தன வாசமென மினி கூறிக்கொண்டு மூச்சை இழுத்து நெஞ்சை நிரப்பினாள்.

நிலம் ஒளியை வெளிப்படுத்தவில்லை என்பதைக் கண்டு கொண்டோம். பரவலாய்ச் சிதறிக் கிடந்த உள்ளங் கையளவினதான சிறுசிறு கற்கள்தான் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

இவை நாகரத்தினமாக இருக்க வேண்டும். நாகத் திலுள்ள அதி உயர் செறிவுடைய புரதமான விஷம் கட்டியாகி, பாம்புகள் மூப்படைந்து கண்கள் குருடாகிப் போகும் போது அவற்றுக்கு ஒளி கொடுப்பவையாக இருக்கும்.

புதுக்கதையொன்றை மினியிடமிருந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

வயது போன பின் வாய்க்குள்ளிருந்து கக்கி அதன் ஒளியில் தான் இரையை தேடும். அதன் பின் அவற்றுக்கு இறக்கை முளைத்து ஏழு கடல் தாண்டி சந்தனக் காட்டுக்கு வரும். நாம் இப்போது சந்தனக் காட்டில் தான் நின்று கொண்டிருக்கிறோம். இவளுக்கு இப்படியான விடயங்கள் நிறையத் தெரியும். என்னுடைய அம்மம்மா மாதிரியே இவளுக்கும் கதைகள் கூற யாரோ இருக்கின்றார்கள். இதை விடவும் நிறையவே தேடல் இவளுக்கு உண்டு. எதையும் கேள்விக்குள்ளால் வளைத்து அதற்கான மறுமொழி தேடி புத்தகங்களுக்குள்ளும், மூளையினுள்ளும் தொலைந்து போவதும் இயல்பு.

மெதுவாக நகர்ந்தோம். எனது வலதுகையும் அவளது இடதுகையும் உரசிக் கொண்டு பாம்புகள் கழற்றிப் போட்ட பழைய சட்டைகளைப் பார்த்தே முன்னேறினோம். ஒவ்வொரு சந்தன மரத்திலும் அதைக் கட்டிக் கொண்ட வண்ணம் நிலைக் குத்தாய் பாம்புகள் தொங்கின. விதி விலக்காய் ஒன்றிரண்டு கம்புபோல நிலத்தில் நின்றன.



ஐந்து மீற்றர் ஆரையில் வட்டமாக பரிதியிலே ஒளி கொண்ட கற்கள் கிடக்க, மையத்தில் பெரிய முட்டை யொன்று இருந்தது. கோள வடிவுடைய அதன் ஓட்டுத் தன்மையைக் கொண்டே முட்டையென ஊகித்துக் கொண்டோம்.

அதை நான் மட்டுமாகக் கட்டிப்பிடிக்க முடியாததால் எதிரெதிர் திசையில் நின்று கொண்ட இருவரும் இரு கைகளையும் விரித்து அணைத்தபடி அதன் சுற்றளவை அளந்து பார்த்தோம். இருவரது நடுவிரல்களும் ஒன்றை யொன்று ஒரு இஞ்சி அளவில் தடவிக் கொண்டாலும் கைகளைப் பிடிக்கக்கூடிய அளவில் அதன் சுற்றளவு இடம் தரவில்லை.

"இது எத்தனை பெரியது" என எண்ணிக்கொண்ட கணம் கண்களை நம்ப முடியாத வகையில் எங்கிருந்தோ பறந்து வந்த ஐந்து தலையுடைய நாகம் தலையை விரித்து படமெடுத்து நின்றது. ஒவ்வொரு தலையிலும் இருந்து பிளவுபட்ட நா நீண்டு வருவதும், உள் இழுபடுவதுமாக இருந்தது. கழுத்தின் கீழப்பகுதியில் இருந்து அடி வயிறு வரை இதயம் நிரம்பித் துடித்துக் கொண்டிருந்தது. பயம் இறங்கி காற்சட்டையை நனைத்தது. அளத்தலை விட்டு விட்டு இருவரும் ஒரே கணத்தில் பூமியை உந்திக் கிளம்பினோம்.

அன்றைய காலையில்தான் தலையில் இரண்டு மொட்டுக்களைத் தந்த அம்மா இன்னமும் சிறு பிள்ளை யைப் போல படுக்கையில் சிறுநீர் கழிப்பதாகத் திட்டினாள்.

கனவின் படபடப்பும், அகால வேளைச் சைகையும் உடம்பின் பாகங்களிலிருந்து கடத்தப்பட்டு பொழுதொவ் வொன்றிலும் உறுத்திக் கொண்டே இருந்தது.

## 04. கடல் அலை

நாங்கள் சந்திப்பதற்கான நேரம் கடந்து அரை மணி நேரம் கழிந்த பின்தான் மினி வந்தாள். இன்னமும் ராகவன் வரவில்லை. இருந்தாலும் அன்றைய பொழுதைத் திட்டமிட்ட முறையில் கழிக்க அம்மம்மாவைக் கூட்டிக்கொண்டு சென்று மாமரத்தின் கீழ் பன்பாயை விரித்து இருக்கச் செய்து அவளைச் சூழ நாங்கள் அமர்ந்து கொண்டோம். அன்று அக்காவும் வந்தாள்.

கிழமையில் ஒரு நாள் அம்மம்மாவிடம் இருந்து கதைகளைக் கேட்டறிவது வழக்கமான செயல். அந்தக் கிழமையின் கதைக்கான நாளையும், நேரத்தையும் பாடவேளையின் இடைவெளியில் கதைத்துத் தீர்மானித்துக் கொள்வோம். மூவரும் ஒரே பாடசாலையில் என்பதால் அதில் எந்த இடரும் நுழைந்திருக்கவில்லை. இது மூவரதும் வாராந்த அட்டவணையில் இருக்கும் மாற்ற முடியாத ஒன்று. அக்காவுக்கு விருப்பு இல்லாவிட்டாலும் அவளும் சில வேளைகளில் வந்து கலந்து கொள்வாள். அம்மம்மாதான் எங்களுக்குச் சொல்ல வேண்டிய கதையைத் தீர்மானிப் பாள். சில வேளை அம்மப்பாவினுடைய் கதைகளையே அளப்பாள்.

அப்போதைய கணத்துக்கான கதைகளை அவள் ஒழுங்குபடுத்த மௌனித்திருப்பாள். அவள் கதை சொல்லும்போது அக்கறையுடன் கேட்க வேண்டும். அடிக்கடி "ம்" கொட்ட வேண்டும். இல்லாவிட்டால் கோபம் வந்து துரத்தி விடுவாள். அப்படி முன்பொருமுறை நடந்திருக் கின்றது. மௌனத்தைக் கலைத்து "கடலில் எப்படி அலை கள் வந்தது தெரியுமா" என்ற கேள்வியுடன் தொடங்கினாள். கடலில் அலை உருவான கதை தொடங்கியது.

திருமணம் முடிந்து பல ஆண்டுகள் கழிந்த பின்னும் குழந்தைகள் இல்லாததனால் கணவனும் மனைவியும் வேதனைப்பட்டுக் கோயிலையும் மரங்களையும் சுற்றி வந்தார்கள். ஊருக்கு வந்திருந்த பெரிய சாமியார்





ஒருவரிடம் அவர்கள் தங்கள் குறையைக் கூற சாமியாரும் அவர்கள் இருவரின் வேதனையை உணர்ந்து கொண்டு அழகானதொரு மாம்பழத்தை அவர்களுக்குக் கொடுத்து பெரிய பானையொன்றில் அதைப் போட்டு பதினைந்து நாட்களின் பின் சாமி படத்துக்கு முன் வைத்து திறந்து பார்க்கச் சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினார். பக்குவ மாகப் பழத்தைக் கொண்டு வந்தவர்கள் புதிய பெரிய பானையொன்றில் பழத்தை இட்டு சாமி அறையினுள் வைத்தார்கள். பதினைந்து நாட்கள் எப்போது முடியுமென இருவரும் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். உடனேயே திறந்து பார்த்து விட வேண்டுமென ஆசை இருந்தாலும் சாமியாரின் உத்தரவின்படி இடையில் திறக்கவில்லை.

சரியான நாளும் வந்தது. இருவரும் குளித்து இறைவனைக் கும்பிட்டுப் பானையைத் திறந்தார்கள். அவர்களின் கண்ணையே அவர்களுக்கு நம்ப முடிய வில்லை. பானையினுள் அழகான பெண் குழந்தை சிரித்த வண்ணம் கிடந்தது.

தங்கள் உயிரை வைத்து அவளை வளர்த்து வந்தார்கள். அவளும் பெரியவளாக வளர்ந்தாள். ஊரில் எல்லோரும் அவளை "மாம்பழ அழகி" என்றே அழைத்தார்கள். ஊரில் யாரிடமும் இல்லாத கொள்ளையழகு அவளிடம் இருந்தது.

அவர்களின் வீட்டிற்கு முன் வீட்டில் ஒரு கால் இயலாத வன், நடக்க முடியாத ஒருவன் இருந்தான். அவன் அவளை எந்நேரமும் விழுங்கி விடுவதுபோல முறைத்துப் பார்த்த வண்ணமே இருந்தான்.

ஒரு நாள் அவள் குளிக்கச் செல்லும்போது தன் ஊன்று கோலை ஊன்றியபடி அவன் தூரத்திக் கொண்டே சென் றான். மாம்பழ அழகியும் ஓட்டமும் நடையுமாக கிணற்றடிக் குச் சென்றாள்.

அவள் ஒரு நாள் குளிக்கச் செல்லும் போது வழியில் கிடந்த புன்னைக்கொட்டையை எடுத்துச் சென்று கிணற்று க்கு அருகில் நட்டு ஒவ்வொரு நாளும் நீர் ஊற்றி வளர்த்து



வந்தாள். அது அவளின் உயரத்துக்கு இப்போது வளர்ந்து நின்றது. ஓடிச் சென்று அதன் மேல் ஏறிக் கொண்டாள்.

"நான் வளர்த்த அன்ன மரமே புன்னை மரமே
முடவன் என்னைப் புடிக்க வாறான்
ஒரு முழும் நீளு...." என்றாளாம்.

அப்படியே அவள் சொல்லச் சொல்ல மரமும் நீண்டு வளர்ந்ததாம். நடக்க இயலாத அவனும் அவளைப் பிடிக்க மரத்தில் ஏறத் தொடங்கினான். மாம்பழ அழகியும் புன்னை மரத்தை வளரச் சொல்லி மேலே மேலே போனாள். அவனும் ஏறிக்கொண்டே வருவதைக் கண்டவள் இனியும் முடியாது என நினைத்துக் கொண்டு

"நான் வளர்த்த அன்ன மரமே புன்னை மரமே
முடவன் என்னை புடிக்கப் போறான்
வளைந்து கடலில் விழு" என்றாளாம்.

புன்னை மரம் கடல் பக்கம் சாய அவள் கடலில் குதிக்க அவனும் குதித்தானாம். அவள் பெண்ணலையாக மாறி கரைக்கு வந்து சுருண்டு உள்ளே செல்ல, ஆணலையாக மாறிய அவன் அவளை துரத்திக் கொண்டே இருந்தானாம். அவனால் அவளை இன்னமும் பிடிக்க முடியாமல் துரத்திக் கொண்டே இருக்கிறானாம்.

கடலில் அலை உருவான கதையை கூறியவள் "கடல் நீர் ஏன் உப்பாயிருக்கிறது" என மினி கேட்ட கேள்விக்கும் இன்னொரு கதை இருப்பதாகக் கூறியவள் வருகின்ற கதைக்குரிய நாளில் அதைக் கூறுவதாகவும், வெற்றிலை போட வேண்டும் என்பதால் அதை இடித்துத் தரும்படி என்னை அழைத்து எழுந்தவள் மடிக்குள் கிடந்த மணற் பருக்கைகளைத் தட்டி விட்டு கூனல் முதுகுடன் நடந்து போனாள்.

## 05. பரதேசி வந்தது


நான், மினி, ராகவன் வகுப்பு முடிந்து பாலம் தாண்டி மெதுவாக எங்கள் ஊருக்கான பாதையில் மிதிக்கத் தொடங்கினோம். மூவரது சைக்கிள்களும் சமாந்தரமாகச் சென்றதால் பல கதைகளை செவிகளுள் பரிமாறிக் கொண்டோம்.

எங்கள் ஊருக்கான பாதையில் அதிக வாகனம் வருவதில்லை. மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் தான் ஊர்ந்து திரியும். பிரதான வீதிக்கு ஏறினால் அப்படிச் செல்ல முடியாது. இருவர் சமாந்தரமாகச் சென்றாலே நகருக்குள் செல்ல முன்னம் பலரிடம் திட்டு வாங்க வேண்டும். சிலர் முறைத்து விட்டு "வீட்டில் சொல்லி விட்டா வந்தீர்கள்" எனக் கேட்டு விட்டுச் செல்வார்கள். அதிலும் அவர்கள் சொல்வது காற்றில் கரைந்து பாதி மட்டும் காதுகளை எட்டும். மீதி வார்த்தைகளைக் காற்றிலே தேடாமல் இதுவாகத்தான் இருக்குமென ஊகித்துக் கொள்வோம். அன்று யாருமே எதுவும் சொல்லவில்லை - எங்கள் உரையாடலைக் குழப்பவும் இல்லை.

நாங்கள் மூவரும் சேர்ந்திருக்கக் காரணமே, எங்களிடம் இருந்த வெறி-சாதிக்க வேண்டும். எங்கள் பெயரை நிலை நாட்ட உழைக்க வேண்டும்-எதையாவது கண்டுபிடிக்க வேண்டும்- என்ற எண்ணத்தினால். எனது கனவு முழுவதும் நீர்மூழ்கிக் கப்பலில் நிறைந்து இருந்தது. உங்களுக்குத் தெரியாது. அது மண்ணைத் துளைத்துப் பாதாள உலகத்துக்கும் செல்லும்.

வைத்தியத் துறையில் பல சாதனைகள் புரிந்து நோபல் பரிசை வென்றுவிட வேண்டும் என்று மினி கூறிக் கொண்டே இருப்பாள். இராகவன் நிறைய வாசிப்பான். புதிய கவிஞர்களை, எழுத்தாளர்களைக் காட்டுவான். வாய்க்குள் நுழையாத பல பெயர்களைக் கூறிக்கொள்ளும் அவன் அவர்களைப் போல எழுத்துத் துறையில் சாதிக்க வேண்டும்





என்பான். அவனுடைய அப்பாவும் நன்றாகக் கதை எழுது வார். இந்த எண்ணமே எங்கள் சிந்தனை முழுவதும் நிறைந்திருந்தது. எங்களிடமிருந்து எந்தப் பாடமும் தப்பி விட முடியாதபடிக்கு அத்தனை பாடங்களையும் நாங்கள் அடக்கி வைத்திருந்தோம். அது தொடர்பாகவே எங்கள் உரையாடலும் நீளும்.

"அடுத்த வருடம் இந்த வேளையில் நாங்கள் பரீட்சை எழுதி முடித்திருப்போம்."

இராகவனுக்கு மினியின் பதில்

"மூவருக்கும் 10A வரவேண்டும்."

...................... இதன் நீட்சியாக இன்னமும் சாதனை குறித்த கதைகள் தொடர்ந்தது.

நீண்டு வளர்ந்து பல தேசம் தாண்டிய எங்கள் உரை யாடல் என் வீட்டு வாசலுடன் முறிவடைந்தது. சைக்கிளை விட்டு இறங்கி விடை பெற்றபோது தூரத்தே நின்ற கூட்டத்தைக் காட்டினான் இராகவன்.

"அதைப் பார்த்து விட்டு நாங்கள் அப்படியே செல் கிறோம் நீ திரும்பி வந்து விடு" — மினி.

மீண்டும் பயணத்தை உண்டாக்கி, கூட்டத்தை அடைந்து ஓரமாக வேலி ஓரம் சைக்கிளைச் சாய்த்து விட்டுக் கூட்டத் துள் நுழைந்தோம். உடல் முழுவதும் நீல நிறம் படர்ந்து பச்சைச் சேலையைச் சுற்றிக் கொண்ட ஒருவன் கத்திக் கொண்டு நின்றான். "எனக்கு சொல்ல வேண்டிய கடமை உங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதனால் தான் சொல்கிறேன். இன்று மட்டும்தான் இந்த ஊர் உங்களுடையது. உங்கள் ஊர் அழிந்து சிதறப் போகின்றது. எல்லோரும் தப்பி ஓடி விடுங்கள்"

கூட்டத்துள் இருந்து ஒரு கல் அவன் முதுகில் பட்டது. நிறையக் குரல்கள் ஓடிப் போகச் சொல்லிக் கொண்டிருக்கை யிலேயே இன்னமும் இரண்டு கற்கள் தோள் பட்டையிலும்,



பிருஷ்டத்திலும் பட்டன. அந்த இடத்திலிருந்து ஓட்ட மெடுத்தவன் சிறிது தூரம் சென்று ஓட்டத்தை நிறுத்தி "இந்த ஊரை விட்டுத் தப்பி ஓடி விடுங்கள்" எனக் கத்திவிட்டு ஓட்டத்தைத் தொடர்ந்தான். அவன் ஓடிக்கொண்டிருக்கும் போதே "ஓடி விடுங்கள் ........ ஓடி விடுங்கள்" என்ற வார்த்தை மட்டும் அவனிலிருந்து நழுவி விழுந்து கொண்டே இருந்தது.

"யாரென்று தெரியவில்லை - பரதேசி அங்கிருந்து - ஊரின் மேற்கு எல்லையைக் காட்டி - இதையே கத்திக் கொண்டு வருகிறான்."

விளக்கம் சொல்லி விட்டு அவனது திசை வழியே சாரனை மடித்துக் கட்டிய வண்ணம் அவன் நடக்கத் தொடங்கும் போது கூட்டமும் கலைய ஆரம்பித்தது.

எங்களில் இருந்து எந்தக் கதையும் எழவில்லை. அந்தப் பரதேசியின் பேச்சு எனது நாக்கைக் காய வைத்திருந்தது. அவர்கள் இருவருக்கும் கையசைத்து விட்டு சைக்கிளை வீட்டின் திசைக்கு திருப்பி மிதிக்கத் தொடங்கினேன்.

சாதாரண பிச்சைக்காரர்களை - பைத்தியக்காரர்களைக் கிண்டல் பண்ணி விட்டு - கண்டு விட்டு வரும் எள்ளல் நிலையை பரதேசியின் வசனமும், அவனைத் துரத்திய நிகழ்வும் தரவில்லை மனதுக்குள். இறந்து போய் விட்டால், என் நீர்மூழ்கியின் வெள்ளோட்டம்..... ஏக்கம் நிறைந்தது.

இறுகிக் கசியும் எண்ணப் படர்வை முற்றுப் புள்ளியிட, நம்பிக்கையின் பக்கங்களைப் புரட்டி, ஊர் அழிதல் நிகழாது. மண்ணுள் புதைதலும், காற்று அள்ளிச் செல்ல, அணு விரிதலும் நடவாத சந்தர்ப்பத்தில் அழிதல் சாத்திய மில்லை என்ற நினைவுகளுடனே வீட்டினுள் நுழைந்தேன்.

## 06. கசப்பு ஞாயிறு

ஞாயிற்றுக்கிழமை.

சுதந்திரமும் கசப்பும் கலந்த நாள். வழமையான நாட்களில் கிரணங்கள் பரவும் அதிகாலையில் நான்கு மணியில் எழுந்து மனதுக்குள் புதைக்கவென - மீள் ஞாபகத்துள் எடுக்கவென அடுக்க வேண்டிய நிறைய பரப்புகள் மேசை மீது கிடக்கும். கனவுகள் ஆக்கிரமித்து எழுப்பல் மணி மறக்கும்போது அப்பாவின் "பிள்ளை வளர்த்தான்" ஆட்டம் போட்டு உடலில் வரி விட்டு - மேசைக்கு வழிகாட்டி உட்காரப்பண்ணும். வெறி தலைக் கேறி ஆடும்வரை பிள்ளை வளர்த்தானின் ஆட்டம் அதிக மிருந்தது.

வெறியின் உச்சத்தில் அலையத் தொடங்கிய பின் ஆணியில் தொங்கி இயல்பிழந்து போனது. ஆனாலும் உருவெடுத்து ஆடும் நேரத்தையும் நான் வழங்கி இருந் தேன். மின் இயக்கியை ஆராய்கையில், விளையாட்டுப் பொருளின் நுண்ணியல்புகளைக் கண்டு கொள்ள முனைகையில், தேவையற்றதை விட்டு புத்தகத்தை எடுக்கச் சொல்லி பயமுறுத்தும்.

ஞாயிறுகளில் தளர்ந்து போகும் நிகழ்ச்சி நிரல் என் விருப்பை முன்னிறுத்தி எனக்கானதாய் ஒதுக்கப்படும். ஆனாலும் மாலையில் காலப்பகுப்பு அமுலுக்கு வரும் - மறுதினம் பாடசாலைக்குரியது என்பதால் அன்றைய நாளில் வேப்பங்குச்சியின் சிதைந்த பிசிர்கள் பற்களை மினுக்கும். அது அப்பாவின் கண்டிப்பான உத்தரவு. அதற்கு அவரின் துணை "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்பது.

நாளொன்றும் பழக்கி இருந்த அதிகாலை விழிப்பு ஊறிப் போய் குறித்த கணத்தில் விழிப்புத் தட்டும். அலுப்பை முறித்து - ஆசைதீர குப்புறக் கிடந்து - எழுந்து - ஆராய்ச்சி தொடரும். ஞாயிறு வரும் திகதியும், உடலம் நட்மாடத்





தொடங்கிய மணியும் ஞாபகத்தின் எல்லை தாண்டிப் போய் இருந்தாலும், அன்றைய திகதியும், நிகழ்வும் இறுக்கப் பட்டுப் போனது என்னுடன்.

2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி, நேற்று யேசு பிறந்த நாள்.

வேப்பங் குச்சியை கடைவாய்ப் பல்லில் சப்பி பிசிர் களாக்கி பல்லுடன் ஒட்டிய தோல் பகுதியை நாக்கினால் கிண்டித் துப்பி விட்டு, வெட்டும் பற்களைத் தேய்த்துக் கொண்டு முன்னே விரிந்து கிடக்கும் கடலை ரசித்துக் கொண்டிருக்கிறேன்.

வழமையை விட கொந்தளித்துக் கிடந்தது. அடிக்கடி இப்படி இருப்புக் கொள்ளாமல் பொங்கி வழியும், பின் தணிந்து போகும். எல்லைப் பிரிப்புக் கோட்டிலிருந்து விநோதமாய் உயர்ந்தது. எதையும் ஊகிக்க முடியாத புது அனுபவம், அவகாசம் இல்லாத கால இடைவெளியில் ஐந்து தலை நாகமாய் தலை விரித்து சீறிப் பாய்ந்து பனை உயரத்துக்கு எழுந்தது.

"அம்மா" - கத்திக் கொண்டு வீட்டின் பின்புறமாக ஓட எத்தனித்தேன். மண்ணில் விழுந்து பள்ளம் தோண்டி எனை இறுகப் பற்றி அள்ளி - அப்போதே என் இதயம் பாய்ச்சலை நிறுத்தி இருக்க வேண்டும் - எதிலோ அறைகிறது. முன் நெற்றி பிளந்து நீர் நுழைந்து ....................



## 07. கடலின் வல்லபம்

யாரும் கொஞ்சமும் எதிர்பார்த்திராத கணப்பொழுதில் பெண்ணலையும் அதைத் துரத்திக் கொண்டு ஆணலையும் ஊருக்குள் நுழைந்தன. யானைகளின் விளையாட்டில் எறும்புகள் நசிபட்டன. மக்களை அமுக்கி அவர்கள் உடலை உப்பச் செய்தன. வீடுகளை உடைத்து பொருட்களை அள்ளிக் கொண்டு சென்றன.

வார இறுதி விடுமுறையில் கண்ணயர்ந்திருந்தவர் களைக் கட்டிலுடன் - குழந்தைகளைத் தொட்டிலுடன் அள்ளிச் சென்றன.

வீட்டுச் சுவரைச் சாய்த்து பலரை நசித்தன.

பனை மரங்களை வீட்டுக்குள் கொண்டு வந்தன.

மலசலகூடங்களை தலைகீழாக்கிப் போட்டன.

இவையெல்லாம் யாருடைய கற்பனைக்கும் எட்டாத தனால் திகைப்பில் ஆழ்த்தியது.

"கடல் ஊருக்குள் வராது"

"கடலாவது இவ்வளவு தூரம் வருவதாவது"

தனது பலத்தைக் காட்டியது. பல நூறு மீற்றர்கள் பரந்து தனது வலிமையை நிரூபித்துச் சென்றது.

பெண்ணலையைக் கண்டு தலையுடன் தலையை மோதிக் கொண்டு ஓட்டமெடுத்தவர்களை ஆணலை துரத்திச் சென்று ஊர் எல்லைவரை விட்டது. சில கிராமங்கள் இருந்தன என்பதற்கு எந்த சாட்சியும் இன்றி வீடுகளை இடித்து தன் மணற்பருக்கைகளை மேவி ஊரைக் கரை யாக்கி தன் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக்கிச் சென்றது.

அவன் இருந்த - கிராமத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான எந்த எச்சமும் இன்றி தின்று தீர்த்து மீதியை வாவியில் துப்பிச் சென்றது.

தலை தெறிக்கத் தப்பி ஓடிய இருவரும், மூவரும் - அடி பாட்டுள் சிக்குண்டு மீண்ட நால்வரும் - ஐவரும், உயரமான



பகுதியில் இருந்த பொதுக் கட்டடங்களுள் பதுங்கிப் பயமும், கவலையும் கலந்த விம்மலைத் தந்தார்கள்.

பாதுகாப்புக்காக அவர்கள் தஞ்சமடைந்திருந்த பாட சாலையும் - கோயிலும் சில மணி நேரங்களில் கதறல் களால் நிறைந்து போனது. கோயிலுள் இருந்த நாயகர் ஓடி ஒழிந்து கொண்டு வெளியே வர மறுத்தார். ஏனென்றால், தலையிலும், மாரிலும் இரு கைகளாலும் அறைந்து கொண்டு பெண்களை விட ஆண்கள் ஓலமிட்டார்கள். சிலருக்கு அழவும், பேசவும் நா எழாமல் வகுப்பறையில் ஒரு மூலையில் சாய்ந்து பிரமை பிடித்துக் கிடந்தார்கள். சிலர் எழுந்து பதற்றத்துடன் குழந்தையை - மனைவியை - கணவனை - தாயை - தகப்பனை- அண்ணனை - தம்பியை - தங்கையை - அக்காவை என யாரையோ தேடித் திரிந்தார்கள்.

“ஐயோ என் பிள்ளை............”

“ஐயோ எனது இரண்டு பிள்ளை.........”

“ஐயோ எனது அம்மா.................”

கதறல் ஒவ்வொரு திசையில் இருந்தும் இடைவிடாமல் கேட்டுக் கொண்டே இருந்தது. அதனுடன் ஆறுதல் படுத்தும் வார்த்தைகளும் கலந்து வந்து கொண்டுதான் இருந்தது.

கதறலும், அழுகையும், அரற்றலும் அன்றைய இரவு முழுவதையும் தின்று வயிறு புடைத்தது.

## 08. பிணங்களின் வருகை

மறுதினம் காலை முதல் பிணங்களாய் உடல் பருத்த மனிதர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். அவர்களை யாரென இனங்கண்டு கொள்வது சிரமமாகும் வகையில் சதைகள் நீரை உறிஞ்சி விகாரத் தோற்றத்தைக் காட்டியதுடன், உற்று அவதானித்தும் அடையாளங் காண முடியாவண்ணம் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே சென்றது. காலை பத்து மணிவரை இருபத்து நான்குடன் ஆரம்பமான எண்ணிக்கை மாலையில் நூறைத் தாண்டி யது.

அவர்களை தொடும்போது தோல் உள்ளே சென்று மேலே வந்தது. வயிறும் முகமும் வெடித்து வெள்ளையாய் சதை தெரிந்தது. கண்களை மூடிக் கொண்டு பாதி திறந்த நிலையில் - விழித்து உற்றுப் பார்ப்பதுபோல் மல்லாக்காய் வரிசையில் கிடக்கப் பண்ணி இருந்த பிணங்கள் அந்தச் சூழலை அருவருப்பானதாக மாற்றின.

கிடத்தப்பட்டிருந்தவர்களுள் பலர் தங்கள் உறவுகளைத் தேடினார்கள். சிலருக்கு மட்டுமே தேடிய உறவு பிணங்களா யேனும் கிடைத்தது.

அலறிக் கொண்டு வந்த ஒருவன் யாரையோ உற்றுப் பார்த்த வண்ணம் வரிசை வரிசையாய் வந்து எட்டு மாதம் மதிக்கத்தக்க ஆண்குழந்தை ஒன்றை அள்ளி அணைத்துக் கொண்டு "ஐயோ கடவுளே........." இத்துடன் அவனிடம் முடிவுற்ற வார்த்தைகளுடன் அழுதான். முனங்கினான். அவனிடம் கண்ணீரும் தீர்ந்து போனது. தலையை ஆட்டிக் கொண்டே அழுதான். இடதுகையில் குழந்தையை தாங்கிக் கொண்டு வலதுகையை மூடி நெஞ்சில் குத்திக் கொண்டான்.

"ஆ......... ஆ .........." இழுத்துக் கொண்டே தரையை ஓங்கி அறைந்தான்.





இதுமாதிரி புலம்பல் காட்சிகள் நிறைய நடந்து கொண்டே இருந்தன. மடியில் ஒருவரைக் கிடத்திக் கொண்டு அல்லது ஒரு பிணத்தின் தலைப்பக்கம் மண்டி இட்டுக்கொண்டு உறவு முறையை - இறந்த முறையை - இறக்கும் முன் நடந்த நிகழ்வைக் கூறிக்கொண்டே அழுதார்கள். அத்தகைய காட்சிகள் நடந்தேறும் போதெல்லாம் பார்வை கலங்கி, இதயம் வெடித்துக் கொண்டே இருந்தது.

இரண்டாம் நாள் பிணங்கள் வைக்கக்கூட இடமில்லாமல் போனது. ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டன. அவற்றை இனங்காண புகைப்படங்களும் எடுக்கப்பட்டன. பிணங்களிலிருந்து எழுந்த நெடி மூக்கை உறுத்தியது. தன் குடும்பத்தில் ஒருவரையாவது பார்த்து விடும் - பிணமாக வேனும் - எண்ணத்துடன் வந்த ஒருத்தி வயிறு குமட்ட வாந்தி எடுத்தாள். அவளைத் தாங்கி இருந்தவன் அந்த இடத்திலிருந்து அகற்றும் போது அவள் ஏதேதோ புலம்பினாள். தன்னை மட்டும் விட்டுச் சென்ற கடலையும், இறைவனையும் திட்டினாள். அந்த நேரத்திலெல்லாம் சடலங்களைத் தேடும் பணி தீவிரம் அடைந்திருந்தது. அதற்காகவே தொண்டர்கள் சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

வாவியின் ஓரங்களில் மிதந்து கொண்டிருந்த கட்டை, கட்டில், தொலைக்காட்சி .......... என்ற இதர பொருட்களுக்கு நடுவில் இருந்து ஊதிக் கிடந்த உடல்களை எடுத்தார்கள். சாவின் மணம் சடலங்கள் இருக்கும் இடத்தை இனங் காட்டியது. மீட்பவர்களுக்கு மூக்கைக் கட்டிக்கொள்ளவும், கையுறைகளை அணிந்து கொள்ளவும் அறிவுறுத்தப் பட்டிருந்தது. பிணங்களைக் கண்டு பிடித்தவர்கள் அவற்றை ஒன்றாகச் சேர்த்து லொறிகளிலும், உழவு இயந்திரங்களிலும் அள்ளிச் சென்று வைத்தியசாலை சவக்கிடங்கின் முன்பாக கிடத்தினார்கள்.

வைத்தியசாலையும் அதை அண்டிய பிரதேசமும் பிண வாடையால் நிரம்பியது. அருகிலுள்ள வீடுகளில்



இருந்தவர்கள் கதவு - யன்னல்களை திறக்காமல் சாப்பிட மனமில்லாமல் சோக இசையைக் கேட்டுக் கொண்டு நாட்டின் பிணங்களைக் கணக்கிட்டுக் கொண்டே மரண நெடியை உள்வாங்கிக் கொண்டிருந் தார்கள்.

பெரும்பாலான வாகனங்கள் வீதி முழுவதும் பிணத்தின் மணத்தைப் பரப்பி விட்டபடியே பகலிலும் விளக்குகளை ஒளிரவிட்டபடி பறந்தன. அவையின் உள் புற அடித்தட்டு முழுவதும் எண்ணிக்கையற்ற பிணங்கள் பொலித்தீன் உறைகள் கட்டப்பட்டுக் கிடத்தப்பட்டிருந்தன. சடலங்கள் இறக்கப்பட்ட பின்னரும் அவ்வாகனங்களில் இருந்த நெடி காற்றுடன் கரைந்து போகாமல் சுற்றிக் கொண்டே இருந்தது.

மூன்று நாள் கடந்து நாலாவது நாளிலும் சடலங்கள் மீட்கப்பட்டன. அவைகளின் மணம் சுற்று வட்டாரம் முழுவதும் சிதைந்து போயிருந்தது. சதை அழிந்து வடிந்தும் கண்கள் உள்ளே இறங்கியும், வாய் - மூக்கு துவாரங்களினால் நீர் வடிந்தும் கிடந்தன. பெரும்பாலானவை விறைத்துப் போய் இருந்தன. சிலையாய் - கறுப்பாகவும். இதன் காரணமாகவே அவை எடுக்கப்படும் இடத்திலேயே புதைத்துவிடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்கு முன் அவை பற்றிய - முடிந்தளவு - விபரத்தை தொகுக்கும்படியும் கிராம அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. வாவி இழுத்து வைத்திருந்து அருவருத்துப் போய் மிதக்க விட்டதும், கரையொதுக்கியதுமான பல பிணங்கள் அவ்வாறே புதைக்கப்பட்டன.

மூடுண்டு போன கிராமத்தைத் தோண்ட தொண்டர் படை கிளம்பியது. வீடுகளுள் சிக்கியும் மணல் மூடுண்டும் நிறைய மனிதர்கள் மாண்டு போயிருக்க வேண்டுமென ஊகம் அதிகமாக இருந்தது. உயிருடன் இல்லாமலும், பிணமாக கிடைக்காமலும் எண்ணிக்கையில் பலர் குறைவதால் அவர்கள் மூடப்பட்டிருக்கலாம் என்றார்கள்.

அப்படித் தோண்டும்போதுதான் மினியின் உடலும் மீட்கப்பட்டது.

## 09. மினியின் கதை

சனி இரவில் தனது அலுவல்களை முடித்துக் கொண்டவன் ஊர் நோக்கிய தனது பயணத்தை இருக்கையில் அமர்ந்தபடி ஆரம்பித்திருந்தான். அதிகாலையின் பாதி இருளில் அது முடிந்தபோது தடவித் தடவி வீடு வந்து சேர்ந்தான் மினியின் தந்தை. மலையைப் பிளந்து பாறைகளை புஜத்தில் ஏற்றிக் கடலில் இறக்கித் தொலைத்த களைப்பு அவனிடம் நிறைந்திருந்தது. ஆழ்ந்த உறக்கத்துள் கைகளை சிலுவையில் அறைந்து குப்புறக் கிடந்தான்.

அவனுக்குக் கதவு திறந்து வழியேற்படுத்திக் கட்டில் வரை பாதை காட்டியவள், அவன் வீழ்ந்த கணத்தில் அடுப்பறையில் பணியில் இருந்தாள். வாழ்வின் சிக்கலை அப்பத்துள் திணிப்பதில் அவளது கவனம் இருந்தது. பிழிந்தெடுப்பதில் மிகவும் சிரமப்பட்டிருந்தாள்.

தன் நண்பியுடன் குறியீட்டு உரையாடல் செய்து உலோக இயல்புகளை அறிந்து கொள்வதற்கு - முகத்தை நீரால் கழுவி, தலையை வாரி மூன்றாய்ப் பிரித்து கைகளைச் சுழற்றிக் கொள்ள ஆரம்பித்தாள்- மினி. அவளது பிம்பம் பக்கம் மாறிப் பின்னலைப் போட்டுக் கொண்டிருந்தது.

தந்தை (கனவு) + தாய் (இடியப்பம்) + மினி (பிம்பம்) = வீடு

வீட்டிலிருந்து 75m வரையான தூரத்தில் நீலப்பாயில் வெள்ளை நுரை தள்ளிக் கிடந்தது கடல். கிடையாய்ப் படுத்திருந்த வீதியில் செல்லும் வாகனம், திண்மமாய் இருந்த மீன் வாடி, நிலைக்குத்தாய் நின்ற வேலிக்கட்டை எதனாலும் மறைக்க முடியாமல் விஸ்வரூபத்தின் பரந்து கிடந்தது அது.

அன்றைய நாள் - ஞாயிறு காலை. அடிவானத்திலிருந்து உயர்ந்து நகரத் தொடங்கியது. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அது உயர்ந்தது என்பதைக் கண்டு கொள்ளக்கூடியளவு வளர்ச்சியும், குரூரமும் கறுப்பாய் மிதந்தது. வானத்தைப் பாதி மறைத்து - எழுந்து கரைக்குப் பாய்ந்தது.





சூன்யத்தின் மையத்திலிருந்து தோன்றிய அதிர்வு அலையாக உருக்கொண்டு முப்பது அடிக்கு மேலாக உயரப் பாய்ந்து முன் சுவரை மோதி, கதவு - யன்னலைத் துண்டாடி உட்சுவரை - அவளின் பிம்பத்தை அவளுடன் சேர்த்தது.

நீரின் கைகள் கட்டிலை அந்தரத்தில் உயர்த்தியபோது விழிப்புத் தட்டிக் கொண்டவன் கூரை வளையைப் பிடித்துக் கால்கள் உள் நுழையும் வரை உதைத்துத் துரத்தினான். உடல் கிழிபட்டு திவலைகள் பிரிய பெண் ஓடிப் போனாள். முறுக்கேறி தோள் குலுக்கி வந்த ஆண், வாவிக்குள் சுருட்டிப் போட்டான் - மினியின் தந்தையை.

முன் கதவை பெண் இடிக்க சமையலறைக் கதவால் தலையை நீட்டியவளையும், அவள் பிழிந்து அவித்த இடியப்பத்தையும் தூக்கி எடுத்தது. கபாலம் வெடித்து மூளை சிதற மரத்துடன் மண்டையை மோதி பாம்பு மாநாடு நடத்திய பாலத்தைத் தாண்டி நகரத்துள் கரையொதுக்கியது. அன்றைய நாளின் கால் பகுதி மீதமிருக்கும்போதே வைத்தியசாலை சவக்கிடங்கிற்கு கொண்டு செல்லப் பட்டாள்.

இரண்டாம் நாளை நிறைத்திருந்த சோகக் கணங் களின் ஒரு பகுதியில், ரணங்கள் நிறைந்து ஊதி வெடித்துச் சிதைவடைந்து மரங்களில் சிக்குண்டு கிடந்தபோது மினியின் தந்தை மீட்கப்பட்டான்.

மூன்று நாள் கரைந்து ஒழுகிப்போய் நான்காவது நாளின் காலை தாண்டி இருந்த நிலையில் மினியின் வீடு தோண்டப்பட்டது. மணற்படை அகற்றப்பட்டு இரு சுவர் களின் பகுதிகள் தூக்கப்பட்டபோது நைந்து தளமாகிக் கிடந்த அவளில் பிம்பங்கள் குத்திக் குத்தி இரத்தம் பாய்ந்திருந்ததாம். வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்காக அவளுடல் தூக்கப்பட்டபோது எவ்வித வாடையும் எழவில்லை.

"உப்பு நீரும், மணலும் அவளின் நைந்த உடலுக்கு பாதுகாப்பளித்திருக்கின்றன" ஒரு தொண்டன் முணு முணுக்கும்போது வாகனத்தில் கிடத்தப்பட்டாள்.



## 10. கதைகள் எழுதல்

நான்கு நாள் முடிந்திருந்த நிலை, வருடத்தின் கடைசி நாள், கிட்டத்தட்ட எல்லாருமே தங்கள் தங்கள் உறவின் இருப்பு - இழப்புப் பற்றிய முடிவை அண்மித்திருந்தார்கள். சிதைக்கப்பட்டு - சூன்ய வெளியாய்ப் பரந்து கிடந்த செங்கல் அடுக்குகளில் குடியிருந்த உயிர்கள் ஊர்ந்து நீள் கட்டடத்தி னுள் வரியாய் அடுக்கப்பட்டிருந்தன. காய்ந்த தின்பண்டங் கள் ஈரமாக்கி உண்ணக் கையளிக்கப்பட்டன. "அ, ஆ........" புதைக்கப்பட்டு அல்லது மறக்கப்பட்டு "ஐயோ........" தேசிய கீதமாக ஒலிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. வாசற்படி ஈரமாகி யதைக் கண்டு நடுக்கமுற்றவர்களும் இங்கு போர்த்திக் கொண்டு கிடந்தார்கள்.

வாய்களின் புலம்பல், குறைவுபட்டு இருந்தது. பற்கள் உராய்ந்து கொண்டிருந்தன. மரண வாசனை ஊரின் மூலைகளிலெல்லாம் உருவமிழந்து அலைந்து திரிந்தது. சா தன்னுருவின் விகாரங் காட்டி உயிர்களைத் தீண்டி பயத்தால் நிறைந்தது. இதயம் துடிதுடித்து நரம்புகளை அரட்டி வார்த்தைகளைக் கோர்த்தது. அவரவர் துயரங்களை அடுக்கிக் கொண்டிருந்தவர்கள் அறுகோணமாய் குத்தி நடுவில் பரப்பிக் காட்சிப்படுத்தினார்கள். யாருடைய சோகம் பெரிதானது என்ற போட்டி இன்றிப் பரவிக் கிடந்த கதை களால் வளாகம் முழுவதுமே நிரம்பி இருந்தது.

வெறுமையின் பிம்பங்கள் கண் உருக்கி இதயம் கிழிந்து சொட்டாய் விட்ட துளிகள் மணலைக் கிழித்துப் பெருக்கெடுத்தது. உவர் கோடுகளும், கீறல்களும் முகங் களில் பரந்து தெறித்துக் கிடந்தது.

அவர்கள் பரப்பி உருப்படுத்திய கதைகளெல்லாம் புகை உருவாய்க் கிளம்பி இதயங்களைப் பிழிந்து கூர்க்கம்பி களால் எல்லோரையும் துளைத்தது. இன்மையின் ஓலம் நிரம்பி நீட்சியின் மூச்சுக்களை வெளிவிட்டது. பார்வைக் கோளங்களை உறுத்தி வழிய விட்டது.



வெறுமையின் கதைகளாகவே உற்பத்தி செய்யப் பட்டவை நிர்வாணமாயே அலங்காரம் புறந்தள்ளி உண்மை காட்டி அலைகையில் பேரலை உருவாகி அதிரச் செய்து உலுக்கி எடுத்தது.

சூழக் குந்திக் கதையை உருவாக்கிய மையம் பின்னாளில் உவர்நீர் உற்பத்தித்தானமாய் பிரகடனப் படுத்தி பேணப்படும் - அத்தனை துளிகள் பருக்கைகளுள் பதுங்கி பொசிப்பற்றுக் கிடந்தன.

# 11. குழந்தைகள் பறிக்கப்பட்ட கதை

என் உயிர்த்துளி நீரில் கலங்கிச் சிதைந்து போனது. அவளுடன் உறவு கொண்டு திருப்திப்படாது, முணுமுணுத்துக் கொண்டிருந்தவளின் வார்த்தைகளைத் துரத்தி புணர்ந்தெழுந்து குழந்தை பெறச் செய்து அவளை சந்தோசிக்க வைத்து பெற்ற மகவுகள் ஊதிக் கரைந்து போயின. உயிரற்ற நிழலாய் சுடு மணற்பருக்கைக்குள் கால் புதைந்து கொப்பளித்துப் போய் கிடக்கின்றேன்.

கடல் பரவி ஊர் தின்ன வருகையில் ஊரே பெட்டி படுக்கைகளுடன் ஓடிக் கொண்டிருந்தது. நீண்டு வளைத்துக் கிடந்த என் சாரனை மடித்து சுருக்கி ஒரு வயதுடன் 15 நாள் நிரம்பியிருந்தவனுக்கு காகம் கரைவதைக் காட்டலை நிறுத்தி வீட்டினுள் நுழைந்தேன். கனவுக்குள் சிதைந்து கால் விரிந்து உயிரிழுத்துக் கிடந்த நான்கும், ஆறு வயதுமான இருவரதும் உயிர் நூலை இழுத்து உடலுக்குள் ஏற்றி உறக்கத்தைக் கலைத்து உலகுக்குக் கொண்டு வந்தேன்.

மனைவியின் கைகளுள் மூத்தவனை திணித்து விட்டு, இரண்டாமவனின் இடுப்பை என் இடுப்புடன் இறுக்கிக் கொண்டு ஓட்டமெடுத்தோம். எதையும் எடுத்துக்கொள்ள அவகாசம் துளியளவும் இல்லாத நிலை இருந்தது. எடுக்க வேண்டிய பொருட்களின் பெறுமதியைப் பதற்றம் அழித்தது. நான் மேற்சட்டைகூட அணிந்திருக்கவில்லை. அப்போது சுற்றியிருந்த சாரத்துடன்தான் இப்போதும் உள்ளேன். நான்கைந்து, எட்டுக் கடந்திருந்தோம். கூரையில் ஏறிப் பாய்ந்த தண்ணீர் எல்லோரையும் அள்ளியது. கபாலத்துள் சுழன்று கொண்டிருந்த அவளின் பெயரை அழைத்த வண்ணமே கால்களை உதறி மேலே மிதக்க எத்தனித்தேன். நீரின் துணையுடன் அவிழ்ந்த சாரன் - கால்களைக் கட்டி உள்ளே இழுத்தது.

கைகளில் இருந்த உருக்கொண்டிருந்த என் உயிரணுக்களை மார்புடன் இன்னமும் இறுக்கினேன். அழுகையும் நீர் விழுங்கி வெளிவிட்ட முட்டை ஒலியும், அவஸ்தையுடன் காதுக்குள் நுழைகின்றது. தூக்கியிருந்த அலை கரையக்





கரைய கால்கள் நிலத்தில் பட தப்பி விடும் நம்பிக்கை உச்சத்துக்கு ஏறிக் கொண்டிருந்த போது ஆணலையால் திரும்பவும் தூக்கப்பட்ட போது அந்தரத்தில் சுழன்று கொண்டிருந்த என் மூக்கில் நுழைந்து கைகளை விடுவித்து - குழந்தைகளைப் பறித்துப் போனது. நீரை அலசி கை களை அலைய விட்டுப் பார்க்கின்றேன். உப்புக் கரிக்கக் கண்களை விழித்துத் தேடுகிறேன். பெண் பிள்ளை யொன்று கத்திக்கொண்டு மிதக்கிறது. குழந்தைகளோ, மனைவியோ பார்வைப்புலத்துள் சிக்கவில்லை. ஆனால் பிணங்களும், குரல்களும் மிதந்த வண்ணம் சென்றன. என்னையே காப்பாற்றிக் கொள்ள நான் போராட வேண்டி யிருந்தது. பிடிமானத்திலிருந்து நழுவி விழும் கைகளை திரும்பவும் எடுத்து வைக்கின்றேன். உரு வந்த கணக்கில் உடல் ஆடி மயிர்கள் ஈட்டியாகின. போராடிக் கொண்டே மரத்தில் முகம் சாய்ந்து கிடந்தேன். என்னைக் கடந்து சென்ற கணங்களின் பொதிகள் எதுவும் நினைவுக்குள் இல்லை. தனக்குள் என்னை நுழைத்துக் கொண்டது மயக்கமா உறக்கமா என்பதையும் யான் அறியேன்.

வட்டுக்குள் வசதியாய்க் குந்தியிருந்த என்னைக் கீழே யிருந்து மூவர் கூப்பிடும் வரை - தொலைந்து போய்க் கிடந்த நான் கீழேயிறங்கி வரும்போது நீர் விட்டுச் சென்ற நுண்ணிய கருமணல் துகள்களால் ஆன சகதி மட்டும் விரவிக் கிடந்தது. வழிகாட்டி கைப்பற்றி அழைத்து வந்து மனைவியைக் காட்டும்வரை துடிப்பிழந்து கிடந்த இதயத்தை நீங்கள் கற்பனையிலும் காண முடியாது. அழைத்து வந்த முகங்களின் பிரதிகள் எதுவும் என்னிட மில்லை. அவளைக் கட்டி, மார்பில் சாய்ந்து கொண்ட துடன் சிறிது சிறிதாய் இரத்தம் உடலில் பரவத் தொடங்கியது. அவளை அலை தூக்கி வீட்டுக் கூரையில் வைத்திருந்தது பற்றியும், கூரையிலிருந்து பாய்ந்து கால் காயம்பட்டு குருதி வழிந்த தடத்தைக் காட்டினாள். இழப்பதற்கு எதுவுமற்றுப் போன நிலையில் தலையிலடித்துப் புலம்பினாள்.

என் உயிரணு உருவாக்கிய மூன்று ஆண் சிங்கங் களும் ........... ஐயோ ..........



## 12. வல்லுறவு

இது எனக்குள் துளியாய் உருவானதோ கபாலத்துள் உதித்து உதிர்ந்ததோ வாழ்வுக் கோட்டில் ஏற்பட்ட - கீறலோ - புள்ளியாகவோ இல்லை. செவிப்பறை மென்சவ்வை அதிரச் செய்தது. துவாரத்துள் காற்றுடன் பிணைத்து விட்டவன் - கட்டடத்தின் மேல் மாடியில் ஒரு மூலையில் குறுகிக் கிடப்பான். உண்மையின் நிழல் அவனிடம் தான் உள்ளது.

துயரத்தின் நுனி அது பனையால் விழுந்தவனை மாடு மிதிப்பதற்கு ஒப்பானது.

நீர்த்திவலைகள் மரமேற்றியிருந்தவளை இறக்கி வந்த இருவர் வார்த்தைகள் கொடுத்துக் கூட்டி வந்திருக்கிறார்கள்.

அவளின் வயது 15, 16 வருடங்களாக இருக்குமாம். கண் களால் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு புதருக்குள் இழுத்துச் சென்று மறைந்தபோது அவளது உடைகள் புதர் முட்களில் சிக்குண்டு கிடந்ததாம். தங்களை மாறி மாறி ஒவ்வொருவராய் அவளுள் நுழைத்துக் கொண்டு மீள்கை யில் கிழிபட்டு உயிர் குறுகிப் போயிருந்தது.

அலை தோண்டி வைத்திருந்த குழிக்குள் அவளது சதைப் பிண்டத்தை இழுத்துப் புதைத்து - முழுப் பிணமாக்கி ஓட்டமெடுத்திருக்கிறார்கள், அவர்களைப் பிடிக்கக்கூடிய வயது தன்னிடம் இல்லாமல் போனதையிட்டு அவன் என்னிடம் நொந்து கொண்டான்.

ஒளி உதிர்ந்து இருள் படர்ந்து ஊர் முழுக்கக் கிடந்த கணம். நீண்டு - குறுகி தங்கள் தங்கள் இடத்தில் சுருண்டு போயிருந்த நிசியில் தவழ்ந்து வந்து ஒருத்தியை இனங் கண்டு கொண்ட நால்வர், அவளது குரலை வெட்டி விரல் களால் நடந்து அள்ளிப் போயிருக்கிறார்கள். கைகளை விரித்து தன் வாயால் அவள் வாயை மூடி கவிழ்ந்து கொண்டு புணர்ந்து களைத்து மற்றையவனுக்கு இடம் விட்டு அகல அவன் சுகித்து எழ.......



நால்வருமாய் வன்புணர்வில் ஈடுபட்டுச் சலித்து நாளைக் காய் இன்னொருத்தி தேடி ஓடிப்போனார்களாம்.

எல்லா இடமும் தஞ்சம் கொடுத்து காம இச்சை தீர்த்தது பற்றிக் கதைகள் எழுந்து கொண்டே இருந்தது - காய்ந்த உணவுக்காய் பின்னிப் போனவர்கள். உடை வேண்டி உடை யகற்றினார்கள். குளிர் நடுக்கத்தில் பிணைந்தவர்கள்.

கண் துடைக்க தொடை கேட்டவர்கள்.

இந்தக் காலத்தில் புணர்தல் ஒழுக்கமாகி இருந்தது.

ஏவிவிடப்பட்ட கொலையாளி 47


திசேரா

## 13. இராகவன் கதை

மன்னிக்க வேண்டும். உங்கள் கதைகளைக் குழப்பி விட நான் இங்கு வரவில்லை - அவைகளைக் கேட்டுக்கூட இல்லை. எனது நோக்கமெல்லாம் அவர்களைத் தேடுவது தான். உங்களின் கதைகளின் மையம் இருந்த கிராமத்தில் தான் எனக்கென இருந்த ஓரேயொரு சகோதரன் இருந் தான். அவனைத் தெரியாமல் நிறையப் பேர் இருக்க மாட்டார்கள். ராஜேந்திரன் என்ற அவனை நேத்திரன் என்றே பலர் ஞாபகம் வைத்திருந்தார்கள். முன்னையது அப்பாவும், அம்மாவும், சேர்ந்து சரியான முதலெழுத்தும், எடுத்துக்களின் இலக்கங்களைக் கூட்டிச் சரியான கூட்டெண் ணும் வரும்படியாக வைத்தது. பின்னயைதை அவனே அவனுக்கென வைத்துக் கொண்டான். அதற்கு பெயர் வைப்பதற்குரிய சம்பிரதாயங்களை அவன் பின்பற்றி னானா இல்லையா என்பது பற்றி நான் அறியேன். எந் நேரமும் எதையாவது கிறுக்கிக் கொண்டிருக்கும் அவன் அதனாலேயே இறந்து போனான். அவனது மனைவியும் - எனக்கு அண்ணி இரு ஆண் பிள்ளைகளும் இருந்த குடும்பத்தை நானே பார்த்துக் கொண்டேன். மூத்தவன் பத்தாவது படித்துக் கொண்டிருந்த ராகவன், இளையவன் ஏழாவது படித்த மோகன்.

நான்கு பகலும், மூன்று இரவுமாக தொடர்ந்து அவர் களைத் தேடிக் கொண்டிருக்கிறேன். பகலில் நனைந்து தோய்ந்து நடுங்கிக் கொண்டே நிற்கும் அவர்கள் தங்கள் உடைமைகள் போனதாகவும், மூத்தவன் தனது புத்தகங் களும் - கனவுகளும் இல்லத்தாகியதாகவும் தலைகளில் அடித்துக் கொண்டே கதறினார்கள். கண்களை மூடாம லேயே அவர்கள் தெரிந்தார்கள். இரவுகளில் கண்களை மூடிக்கொண்டால் தண்ணீரில் மூழ்கிக் கொண்டே காப்பாற றும்படி கைகளை ஆட்டியாட்டி இழுபட்டுப் போனார்கள். இதனாலேயே கண்ணயர முடியாமல் கண்கள் வீங்கிப் போயின.





சவச்சாலைக்கும், வீதி ஓரங்களுக்கும் புதியதாக எடுத்து வரப்படும் பழைய பிணங்கள் ஒவ்வொன்றின் அருகிலும் நான் நின்றேன். ஊதிப்போய் இருந்தவற்றை கண்களுக் குள் எடுத்து அவற்றை வற்ற வைத்தேன். கறுத்தவற்றை யும், சிதைந்தவற்றையும் இயல்பான உருவமாக்கி ஞாபகத் துள் இருந்தவற்றுடன் ஒப்பிட்டேன். எதுவும் சரியாக இணை ந்து கொள்ளவில்லை. இதற்காகவே எனது செல்லிடப் பேசி யின் இலக்கத்தை எல்லோருக்கும் விநியோகித்து வரு கிறேன் – போகும்போது உங்களுக்கும் தர இருக்கிறேன்.

பாதிக்கப்பட்டோர் தங்கி இருக்கும் இடங்களுக்கெல் லாம் சென்று வந்தேன். ஞாயிறு அந்தி சாயும் பொழுதில் தொடங்கி இப்போது நிற்பது முப்பத்திரண்டாவது. இன்றைய நாளில் இது ஏழாவது. இந்த நிலையப் பதிவாளர்கள் எல்லோரிடமும் என்னுடன் பேசக்கூடிய இலக்கமும் உண்டு.

இன்று அதிகாலையில் சூரியனுக்கு முன்னமே கடலின் கரை வழியே இருபது கிலோமீற்றர் வரை நடந்து களைத்தேன். நேற்று பாலங்கள் உடைந்து போக்குவரத்து துண்டிக்கப்பட்ட இடங்களுக்கும் தோளில் சைக்கிளைத் தூக்கி வைத்து கொண்டே போய் வந்தேன். அப்போதுகூட கடல் வருவதான காற்றின் கத்தல் கேட்டு தலை தெறிக்க ஓடி காயப்பட்டேன். நாளையும் எங்கு தேடுவதெனத்தான் திட்ட மிட்டு வருகிறேன். இதுவரை மூவரில் ஒருவர் கூட கிடைக்க வில்லை.

வீட்டின் அடித்தளத்தையும், சின்னவன் விளையாடிய விளையாட்டுக் காரையும்தான் கண்டேன். அது கூட கோயில் திருவிழாவின்போது அவன் கேட்டு அழுததற்காக நான் வாங்கிக் கொடுத்ததுதான்.

எனது வேதனைகளை நீங்கள் புரிந்திருப்பீர்கள். உங்களால் முடிந்தால் ஏதாவது தகவல் கிடைக்கும் போது என்னுடன் தொடர்பை ஏற்படுத்தினால் எனது அலைச்ச லுக்கு முடிவு கிடைக்கும். இப்போது நான் போனாலும் திரும்பியும் வருவேன். இரண்டு தினம் – ஒரு வாரம் கழிந்ததாக அல்லது நாளையாகக்கூட அந்த நாள் இருக்கலாம்.



## 14. கொள்ளையிடப்பட்ட கிராமங்கள்

கிட்டத்தட்ட எல்லா வீடுகளினதும் கதவுகளும், யன்னல் களும் உடைக்கப்பட்டன, கடலும், கள்வர்களும் போட்டி போட்டு பொருட்களை அள்ளிப் போனார்கள். கடலால் கொண்டு செல்லப்பட்டவையும், திருடர்களால் களவாடப் பட்டவையும் பிரித்துப் பார்க்க முடியாதிருந்தது. கடலால் வெளித் தெரியும் கனவுதான் புரிய முடிந்தது. அத்தகைய பொருட்களை எங்காவது கண்டு கொள்ளக் கூடியதாக கரையொதுக்கி இருந்தது. ஆனாலும் எது யாருடையது என்பதைப் பிரித்துக் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்க வில்லை. சில மண்ணுள் மூடுண்டு போயிருக்கலாம், என்ற ஊகங்கள் மட்டும்தான் மிச்சமிருந்தது. எப்படியானாலும் கடல் கொண்டு போனவைகளைக் கணக்கிட முடியாது. அதைப் போலவே திருடர்களால் களவாடப்பட்டது குறித்தும் கணக்கிட முடியாது. கடல் விட்ட மீதியையும் கடலிடமிருந்து கொஞ்சமும் அவர்களால் கொண்டு செல்லப்பட்டு பதுக்கப் பட்டன. இந்தத் திருட்டு எப்போது நடந்தது என்பதை யாராலும் அறிய முடியாமல் இருந்தது. தங்கள் தங்கள் உயிரை இறுகப் பற்றிக் கொண்டு ஒட்டமெடுக்கையில் பொருளும், நகையும் அவர்களின் ஞாபகத்துள் எட்ட வில்லை. எட்டியிருக்கவும் முடியாது– ஆனால் அதே நினைவுகளில் அலைந்தவர்களாலேயே கொண்டு செல்லப் பட்டன. இதில் அவர்களுக்கு ருசி நிறைந்திருந் தது அல்லது நிறையவே இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

இதனாலேயே கடல் ஊருக்குள் அடிக்கடி வந்தது. இரண்டாம், நான்காம் தினங்களிலும், ஒரு கிழமை கழித் தும்..... வந்து கொண்டே இருந்தது. அடிபட்டு விழுந்து, மிதிபட்டு ஒட்டமெடுத்தார்கள். இறந்து போனார்கள். வீடுகள் திறந்து அனாதையாகக் கிடந்தன.

உதடு காய்ந்து நா தொங்கிக் களைத்து அவர்கள் வீடு களுக்குத் திரும்பி வந்தபோது வீடுகள் மட்டுமே



அநாதையாகக் கிடந்தன. இப்படியான கொள்ளைகள் திருடர்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்டன என்பதை யாரும் அறிந்திருந்தாலும் யார் என்பது குறித்துத் தகவல்கள் கிடைக்கவில்லை.

மணலால் மூடுண்டு இருந்த கிராமத்தின் பாதியை அவர்களே தோண்டி ஆராய்ந்திருந்தார்கள். கடல் சோர்ந்து பதுங்கி நகர்ந்த வீடுகளை உடைத்த இவர்கள்தான், கடலுக்கு வல்லமை அதிகம் என்பதைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள்.

இதைப் போலவே கொள்ளையிடும் ரகசியம் நிறையத் தெரிந்த பலர் இருந்தார்கள். எந்தப் பாதிப்பும் இன்றி நிவாரணத்துக்கு முண்டியடித்தார்கள். குடும்பப் பட்டியலில் மீண்டும் பலர் புதிதாக இறந்தார்கள். அவர்களுக்கான பணத்தையும் திருடிக் கொண்டு இன்னமும் அவர்கள் கொழுத்துக் கொண்டிருந்தார்கள்.

## 15. தகப்பனால்–தாய் போன கதை

.... ம்மா... தான் ன்யை .... ம் .... ம்மா ..... கடக்கி .......
போய் ப்பாக்கு சாப்பாடு ..... ய்யோ ...... ஓ ..... ஓ .......

அவனால் எதையுமே சொல்ல முடியவில்லை. பழைய நினைவுகள் அவனைத் தோற்கடித்துக் கொண்டே இருந்தன. ஒவ்வொரு முறையும் தன் கதையைக் கூற முனையும் போதெல்லாம் வார்த்தைகளை இடைமறித்தது, எவ்வளவு முயன்றும் அவனால் தோற்றுப் போய்விடுவதைத் தவிர்க்க முடியாமலேயே இருந்தது.

அவனுடைய கால்கள் இரண்டையும் மடக்க முடியாமல் முழங்காலின் மீது துணி கட்டப்பட்டிருந்தது. நெற்றியிலும் கூட, அலை தூக்கி மின்சாரக் கம்பத்துடன் அவனை அடித்த போது நெற்றியின் வலது கண்ணுக்கு நேரே நெற்றி பலமாக தாக்கப்பட்டதுடன் வலது முழங்கால் சில்லு உடைபட்டது. இதனால் நிலை குலைந்த அவனின் கைகளில் இருந்து நழுவுண்ட அப்பா நீரினுள் அமிழ்ந்து போனார். இரண்டாம் நாளில் அவனுடைய அப்பா, அம்மா, தங்கை மூவரது பிணங்களும் வைத்தியசாலை சவக்கிடங்கில் கிடத்தப் பட்டிருந்தன.

இரண்டு மாதங்களாக கடுமையான நோய்க்கு ஆட் பட்டிருந்தவர் ஒரு வார போராட்டத்தின் பின் கட்டிலுடன் நாட்களை கடத்திக் கொண்டிருந்தார். ஒவ்வொரு தினத் திலும் மெத்தை விரிப்பு மாற்றப்படும் பத்து நிமிடங்கள் வரை சாய்மனைக் கதிரையில் கிடந்து பின்னர் கட்டிலுடன் சங்கம மாகி விடுவார். அவரை அறியா வண்ணமே மலமும், சலமும் போய்க்கொண்டிருந்ததால் நாற்றமெடுக்கும் மெத்தை விரிப்பையும் இரண்டு அல்லது மூன்று தினங் களுக்கு ஒருமுறை மெத்தையையும் மாற்ற வேண்டி இருந்தது. ஆனாலும் அவரைக் காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கை இருந்து கொண்டே இருந்தது.

அலை ஊருக்குள் வருவது குறித்துத் தகவல் கிடைத்த போது இவன் அப்பாவிற்கு இடியப்பம் வாங்கும் பொருட்டு நின்று கொண்டிருந்தான். பணத்தைக் கொடுத்து





இடியப்பத்தை வாங்கிக் கொள்ளாமலேயே ஓட்டமெடுத்தான். அம்மாவையும், தங்கையையும் முன்னே ஓடச் சொல்லி விட்டு அப்பாவைத் தோளில் கிடத்திக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

"ஐயோ அம்மா நான் உன்னையாவது கூட்டிக்கொண்டு ஓடியிருந்தால் காப்பாற்றி இருப்பேன் ...... ஐயோ .... ஐயோ"

"உன்னைப் போல ஒருத்தரை இனியும் என்னால் காண முடியுமா......"

"ஏன் என்னை மட்டும் விட்டுத்து எல்லோரும் போனீங்க"

"நானும் வாறன் என்னையும் கூட்டித்து போங்க......"

இப்படியே தான் அவனது புலம்பல் நீடித்திருந்தது. இரு கைகளையும் அடித்துக் கொள்ளும்போது மணிக்கட்டின் கீழ் பகுதி ஒன்றுடன் ஒன்று நைபட்டு மீளும், தலையில் அடி பட்டதன் விளைவாய் அவனுக்குப் பித்தம் கலங்கி விட்டதாக அதிகமானோர் எண்ணினர்.

இடுப்புவரை பரவி நிறைந்த பெண்ணலை அப்பாவைத் தொடாமல் இரு கைகளையும் அப்பாவுடன் தலைக்கு மேலால் உயர்த்தி நீரைக் கிழித்து நடக்கும்போதுதான் ஆணலை அவனைத் தூக்கிக் கம்பத்துடன் மோதியது. மறு நாள் அந்தி சாயும் வேளையில் நினைவு திரும்பியவன் அதற்கடுத்த நாள் மூவரையும் பிணமாய்க் கண்டதிலிருந்து வார்த்தைகள் எதுவும் சரியாய் எழாமல் தோற்றுப் போய் புலம்பல் வாயுடன் மட்டும் இருந்தான்.

அவன் பழைய நினைவுகளுடன் இயல்புக்குத் திரும்பி விடுவான் என்பதில் பலருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. இன்று, நாளை அல்லது நாளை மறுதினத்திலாவது எப்படியும் ஒரு வாரத்துள் அவன் எலி/பூச்சி மருந்து என எதையாவது குடித்தோ, தூக்கில் தொங்கியோ இறந்து போய் விடுவான் என எண்ணிக்கொண்டிருந்தார்கள். சிலர் அவன் கடலில் மூழ்கித் தன்னைச் சாகடித்துக் கொள்வான் என நம்பிக் கொண்டு இருந்தார்கள். பழைய நினைவுகளில் மூழ்கிப் போன பலர் அப்படித்தான் கடலில் மிதந்தார்கள்.



## 16. விரல்களும், காதுகளும்

மூன்றாம் நாளில் ஒளி மங்கிக் கொண்டிருந்த பொழுதில் என நினைக்கிறேன். தொண்டர்கள் அதிகமாக செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். மரங்களிலும் புதருக் குள் சிக்குண்டும், வாவி ஓரங்களிலும் கிடந்த பிணங் களையும் - இடிபாட்டுக்குள் மாட்டி இருந்தவற்றையும், மீட்டுக் கொண்டிருந்தார்கள். அதன்போது காயப்படும் அவர்களுக்கு உடனடியாக மருந்து கட்டிவிட அவர்களிடம் முதலுதவிப் பெட்டிகள் இருந்தன. தொற்று நோய் ஏற்பட்டு விடலாம் என்ற பயம் எல்லோரிடமும் இருந்தது.

மார்பின் இடது புறத்தில் இரத்தக் கறைகளுடன் வேக மாக வந்து கொண்டிருந்த இருவரைக் கண்டு கொண்ட தொண்டர்கள் காயங்களுக்கான மருந்தை வழங்க அவர் களை அழைத்த போது இன்னமும் பயம் கொண்டவர்களாய் ஓட்டமெடுத்தார்கள். எல்லோருக்கும் அவசரம் தலைக்கு மேல் இருந்தது. முக்காலுக்கு அதிகமான பங்கினர் வேகமாகவே பயணித்துக் கொண்டிருந்தார்கள். இரத்தக் கறையுடன் ஓடுபவர்களிடம் ஆபத்துக்கான அவசரத்தைக் கண்ட தொண்டர்கள் தொடர்ந்த போது முன்னே ஓடிக் கொண்டிருந்த இருவரில் ஒருவனிடமிருந்து விரலொன்று கீழே விழுந்தது. அதை எடுத்த ஒரு தொண்டன் விரல் விழுந்ததை ஏனையவர்களுக்கும் சத்தமிட்டான். வேகத் தைக் கூட்டி இடைவெளியைக் குறைத்துக் கொண்டு எதிர்த் திசையில் வந்தவர்களுக்குச் சைகை காட்டி இருவரையும் வளைத்துக் கொண்டார்கள்.

அனைவரது கால்களிலும் விழுந்து மன்னிப்புக் கேட்டவர்கள் தங்கள் வீடு விழுந்து பொருட்களெல்லாம் போய்க் குழந்தைகளுடன் சாப்பாட்டுக்குச் சிரமப்படுவதாக வும், அதனால்தான் இப்படியானதொரு களவில் ஈடுபட்டதாக வும், இதற்கு அருகில் இருந்தவன்தான் யோசனை சொன்ன தாகவும் ஒருவன் கூறியபோது, இருவரும் அடித்துக் கொண்டார்கள்.



தான் இன்று மட்டும்தான் வந்ததாகவும் நேற்றைய இரவில்தான் மற்றவன் தனது இப்படியான திருட்டு முறையை விபரித்ததாகவும் அவனது பதினொரு வயதும், ஆறு வயதுமான இரு பெண் பிள்ளைகளுக்காக தன்னை மன்னிக்கும்படி கேட்டான். அதற்காகத்தான் இதற்கு ஒப்புக் கொண்டதாகக் கூறினான்.

தாயை இழந்தவர்கள் தவித்துக் கொண்டிருப்பார்கள். இருட்டும் வேளையில் தான் எப்படியும் அங்கு சென்று விட வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் கவலை பன்மடங்காகி விடும் என்று மன்றாடிக் கொண்டே மேற்சட்டை, காற்சட்டைப் பைகளில் இருந்த விரல்களையும், காதுகளையும் அள்ளி வெளியில் போட்டான்.

சிறியதும், பெரியதுமான எட்டு விரல்களும் நான்கு, ஐந்து வயதுக்குரிய காதுகள் மூன்று உட்பட பதினொரு நிறக் கற்கள் பதித்த மோதிரங்களும், பல வடிவமுடைய காதணி களும், தங்கத்தால் அணியப்பட்டிருந்தன. கூட்டத்தில் நின்ற ஒருத்தன் மற்றையவனின் பைகளுள் இருந்தவற் றையும் வெளியே அள்ளிப் போடப் பணித்தான். உணர் வற்ற நிலையில் எதையுமே கேட்க முடியாமல் பதினொரு காதுகளும், பத்து விரல்களும் விறைத்துப் போய்க் கிடந்தன. இரண்டு கைச் சங்கிலிகளும் கூட.

முன்னையவனிடம் இருந்த சோடிகள் இவனிடமிருந் தன. மொத்தமாக பதினொரு பேரின் இருபத்திரண்டு காது களும் கிடந்தன. ஆளுக்கொரு காதாக வெட்டி எடுத்திருக் கிறார்கள், ஒன்று, இரண்டில் தான் இரத்தம் கசிந்திருந்தது. அதுவும் பெரிதாக இல்லை. மற்றையவைகள் எல்லாம் வெள்ளையாகவே சதைப் பிண்டமாகக் கிடந்தன.

இருவரைச் சுற்றியும் கூட்டம் அதிகமாகி விட்டிருந்தது. சிலர் மூக்குகளைப் பொத்திக் கொண்டு நின்றார்கள். சிலர் அவர்களை அடித்தார்கள், பாவிகள் – கொள்ளைக்காரர்கள், இரக்கமில்லாதவர்கள் போன்ற வார்த்தைகள் எல்லார்

வாய்களிலும் இருந்து வந்தது. யாருமே மௌனமாய் இருந்ததாய்த் தெரியவில்லை. காதுகளும், விரல்களும் அவர்களுக்குக் கோபத்தை தந்தன.

மீட்புப் பணிக்காக ஓடித் திரிந்த வாகனம் ஒன்று இருவரையும் ஏற்றிக் கொண்டு சென்று, விசாரணைக்காகக் கையளித்த போது அங்கும் முன்னம் பேசியவன் மட்டுமே பேசிக் கொண்டிருந்தானாம்.

ஒரு பிணத்தில் நகைகள் இருப்பதைக் கண்டால் அந்த உடலின் பாலுக்கும், வயதுக்கும், ஏற்றதான ஒரு உறவு முறையைக் கூறிக் கட்டியணைத்து அழுது இருவருமாகத் தூக்கிச் சென்று மறைவான இடத்தில் வைத்து நகையைக் கழற்றிக் கொள்ள அவகாசம் போதாமல் போகும் என்பதாலும், நிறைய பகுதியை வெட்டி விடுவார்களாம். அதற்காக கூரிய விரித்து மடக்கக்கூடிய கத்திகளை வைத்திருந்தார்களாம். காலை ஏழு மணி தொடக்கம் அதுதான் இருவரது வேலையாக இருந்ததாயும் கூறினான்.

ஆனால் மற்றையவன் நேற்றுத் தொடக்கம் இதைத் தான் வேலையாகக் கொண்டு நிறைய நகைகளைச் சேர்த்து விட்டதாகவும் நேற்று மட்டும் பத்து பவுனுக்கு அதிகமான நகைகளை சேகரித்து விட்டதன் ஆசையைக் காட்டியே இன்று என்னைக் கூட்டி வந்தான்.


"காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. கூட்டத்தில் ஒருவன் கூறியதாக எனக்கு ஞாபகத்துள் எட்டியது.



## 17. உங்கள் கதை

இவை மாதிரியே பாவப்பட்டதும், சோகப்பட்டதுமான கதைகள் நிறையவே இருந்தன. ஊர் முழுவதும் அவைகள் உலாவி வந்ததும், ஊர்களையும், நாடுகளையும் அவை நிரப்பி சர்வதேசமயமான சோகத்தை உண்டு பண்ணியதும் உங்களுக்குத் தெரியும். அதில் உங்களின் கதையும் ஒன்றாக, அல்லது காதுகளில் பட்டு மனதைக் கரைத்த கதையாக இருக்கலாம்.

இப்போது நீங்கள் அதை எங்களுக்குக் கூறலாம். மிகுந்த கவலையுடனும், கவனத்துடனும் அதைக் கேட்டுக் கொண்டே இருப்போம்.


Kck
2007



## 18. கடலைச் சபித்தல்

அன்று எட்டாம் நாள்

கடல் – வெளி நேர் கோட்டுத்தளப் பிரிப்பில் கிரணங்கள் பெருக்கெடுத்த வேளையில் கூட்டம் கொஞ்சம் கொஞ்ச மாகச் சேர்ந்து கொள்ளத் தொடங்கியது.

தூவப்பட்டிருந்த மலர்கள் மேலும் கீழும் ஆடிக்கொண்டு அந்தரித்தன. அவை கடலுக்கானதாக ஒரு போதும் இராது. உப்பு நீரில் மூச்சைக் கரைத்து உருவிழந்து போனவர்களுக் குத்தான்.

உன் நீர் நாக்குகளை நீட்டி இழுத்தெடுத்து ஊறப் போட்டு சதைப் பிண்டத்தைச் சப்புக் கொட்டியவள் நீ. பிரபஞ்சத்தின் பாதிக்கு மேலாய் நின்று எங்கும் பரந்திருக் கும் அகங்காரம். லட்சத்துக்கு மேலாய் வாழ வைப்பதால் லட்சங்களை அழிக்க அதிகாரங்கள் கையளிக்கப் படாது — பாதகனே — வற்றி சுருங்கிப் புள்ளியாயப் போகையில் என் நாவுக்கு சுவையூட்டி மலக்குழிக்குள் போவாய்.

பெண்களைச் சுகித்துப் புசிக்க, குழந்தைகள் உடல் புக, குடும்பம் கலைக்க இத்தனை வேட்கை கொண்டனையே! பாசத்தைக் கொஞ்சமேனும் நுகர முடியுமா, அல்லது நுகர்ந்து தான் இருக்கின்றாயா? கனவுகளைத் தின்னும் கைங்கரியம் தெரிந்து, உப்பிட்டுச் சுவையூட்டி நக்கி வாழ்வைச் சூன்யப்படுத்திப் போன உன்னில் கருவாடு மட்டும் மிதக்கும்.

| | | | |
|---|---|---|---|
| அம்மா | அப்பா | தாத்தா | பாட்டி |
| சித்தி | சித்தப்பா | பெரியப்பா | பெரியம்மா |
| அக்கா | அண்ணா | தம்பி | தங்கை |
| நண்பி | நண்பன் | காதலன் | காதலி |
| மனைவி | கணவன் | மகன் | மகள் |
| மாமா | மாமி | மச்சான் | மச்சாள் |
| அண்ணி | அத்தான் | பேரன் | பேத்தி |

ஒருவரை அல்லது பலரைத் தின்றதற்காய்ச் சபிக்கப் பட்டுக் கொண்டே இருந்தது.




தகிக்கும் ஒளிப் புலத்தைக் கடலில் மேய விட்டு ஆவி யாக்கிப் பரப்பி விட கண் சிவந்த பலர் கடலை வெறித்த வண்ணம். மணற்பருக்கைகளால் கடலை நிரப்பிச் சுருக்கி நிலப் பரப்பைக் கூட்டி விட இரு கைகளாலும் மணலை கிளறி எறிந்து கொண்டு கைகளில் அள்ளி கடலில் வீசியும், சிறுபிள்ளை விளையாட்டில் பலர் மூழ்கி' இருந்தார்கள். அவர்கள் அவர்களாய் இராமல் மரித்துப் போன உறவு களுள் மூழ்கி இருந்தார்கள் – தங்கள் எண்ணப்படி யாருமே செயற்பட்டுக் கொள்ளவில்லை.

லட்சம் முகங்களைப் புதைத்துச் சலனமற்று, இயல்பாய் ஆண் பெண்ணை நுரை தள்ளி விளையாட விட்டு, சயனித் திருந்த கடலில் காறி உழிந்த நுரையும் கரையேறி வந்தது – போனது. வருவதும் போவதுமாய் அலைந்து கடல் மேலேயே கிடந்தது. அது வெட்கமில்லாக் கடல்.

பருக்கைகளுள் விழுந்து – திரண்டு ஓடிக் கொண்டிருந்த கண் வடித்த உப்பு நீரும் கடலால் உறிஞ்சப்பட்டது.

எதுவுமே தனக்கில்லையென்பதாய் விரிந்து கிடந்த கடல் பிண்டங்களையும், பூக்களையும், தேங்காய்ப்பாதி – பழம் – அரிசி – வாழையிலை என எல்லாவற்றையும் சுமந்த வண்ணம் – மூடப்படும், சுருங்கிவிடும், புள்ளியாய்ப் போகும் எச்சில் சுமக்கும் கண்ணீர் விடும் சாபத்துடன் இறந்து போன ஆத்மாக்களைத் தேடிக் கொண்டு சென்றது.

அன்றைய நாள் முடிவுறப் போகும் கடைசிக் கணம் வரை கடல் கலங்கடிக்கப்பட்டுக் கொண்டே இருந்தது.

கிரணங்கள் உள்ளிழுக்கப்பட்டு வேறு தேசம் தேடி சூரியன் ஓடும் வரை தங்கள் உறவுகளைத் திருப்பித் தரும்படி அடம் பிடித்தவர்களும், சனத்துக்கு மோட்சம் வேண்டிப் பிரார்த்தித்தவர்களும் நினைவுகளுள் ஆழ்ந்து தொலைத்தவர்களும், தங்கள் தங்கள் காட்சிப் படிமங்களை நேரிடையாகக் கடலுக்குக் காட்டி இரங்க வேண்டினார்கள்.

ஏவிவிடப்பட்ட கொலையாளி 67

திசேரா

## 19. நுரைக் கடிதம்

மன்
நிப்பீர்,
உங்கள் கரு
த்துக்களைப்
போலோ,
எண்ணங்
களைப் போலோ,
........................
நான் குற்றவாளியாய்
இல்லை
உங்கள்
தேசத்துள் நான்
ஏவி விடப்பட்டேன்.

ஆதாரங்கள்
இன்றி அலைய,
விட எந்தக் கணமும்
நான் எண்ணியிருக்க
வில்லை.
........................
முழுவதுமாய்
எனை அடக்கிக்
கொள்ள முனைந்தும்
பயனற்றுப் போனது
........................
உங்கள் உறவுகளுடன்
நானும் தொலைந்து போனேன்.
இயல்பு, அழகு குலைந்து
போனேன், எனக்குள்
எனை அடக்காமை





பற்றிய வெட்கத்
தில் தலை குனி
ந்து கொண்டே
இருக்கிறேன்.

உடலங்களை
படிமங்க
ளாக்கி
ஆழ்
பகு
தி
யில்
அடக்கி
க் கொண்டே
நொந்து
வாழ்கிறேன்.
..........................
அன்றைய
அதி
காலைப் பகு
தியில் உங்களைப்
போலவே ஆழ் துயிலில்
இருந்து கொண்டிருக்கையில்
படுக்கையின்
கீழிருந்த தட்டுகள் விலகி
நான்
உ
ள்
ளி
முக்கப்
பட்ட கணத்திலேயே வெளி
யே தள்ளி விடப்பட்டு
எனது இடத்தைப் பிடித்து



ஒன்றுக் கொன்று மேலாக ஏறிக் கொண்டன
அந்த
.....................
அதிர்வு
பேரதிர்வு
அ
து தான்,
அங்கிருந்து எனைத் துரத்தியது.
உங்களை நோக்கி ஏவி விட்டது.
கொலையாளி
ஆக்கியது

முழு.........வ ........... தும் கறு
ப்பாக்கப்பட்ட நான்
உங்
கள் வீடு
களை உடைத்தேன்
....................
உங்
.................
.................
.................
.................
கள்
.................
.................
.................
.................
.................
.................
.................
.................
.................

................

................

................

................

நிழ

லைக் கூட நனைக்காத நான்.......

................

................

நீங்கள் - அல்

லது உறவுகள் அமிழ்கையில்

மே

லே

தூக்கித் தள்ளி மிதக்கப்

பண்ணினேன் - மரங்

களை அணமித்துப்

பிடித்துக்

கொள்

................

ளச் சொன்னேன்

இது விநோ-

தமாய்

நட

ந்தது

................

க

ண

ப்

பொ

ழுதில்

எல்

லாமும்



நட

ந்து

முடி

ந்தது. நானே

ஓய்ந்து

அமரும் போது

மனது

வலி கொண்டு துடித்துப் போனேன்.

மன்

னி

ப்பீர்!

போற்றுவார்

போற்ற

ட்டும் மணல் வாரி

தூற்றுவார்

தூற்றட்டு

ம்

_ _ _ _ _ _

மறுநாள் காலையில் காலைக் கடன் முடிக்க, சுற்றி அலைய என எதற்கோ கடலின் பக்கம் சென்றிருந்தவன் நுரைகளால் செதுக்கப்பட்டு மீற்றர் கணக்கில் நீண்டு கிடந்த எழுத்துக் கோர்வையைப் படித்து விட்டுக் காற்றில் கலந்து விட்டான்.

சுழன்றடித்த காற்றுக் கூட்டம் சேர்ந்து விநோதங் காட்டி கருத்துப்பகிர்வு செய்து ஓயும்போது காலடிகளும், அதிலிருந்து தெறித்து வீழ்ந்த பருக்கைகளும் நுரை குடித்துக் கடலில் குளித்து மயங்கிக் கிடந்தன. காற்று எந்தச் சலனமுமின்றி வெறுமையாக அலைந்து திரிந்தது. நிர்வாணமாக.

# 20. முதலை மாநாடு

முரட்டுத்தனமான நாட்கள் கணங்களாலும், நிமிடங்களாலும் நிரப்பப்பட்டுக் கூட்டங்களாலும் மாநாடுகளாலும் உருவாகிக் கொண்டே இருந்தன.

காற்றைக் கிழித்து வந்திறங்கிய அலுமினியப் பறவைகளில் இருந்து இறங்கிய அன்னிய தேசத்து வெண்ணிற மனிதர்களால் தக்கன பிழைத்து வாழ்வதற்காக கூட்டப்பட்டன. இரகசியம் நிறைந்த பெட்டகங்கள் அவர்களுக்குக் கையளிக்கப்பட்டன. அதைத் திறப்பதற்கும், பேணலுக்குமான அறிவுறுத்தல் அடங்கிய வழிகாட்டல் நூல்களும், வகுப்புக்களும் நடாத்தப்பட்டன.

கடல் கொண்டு வந்த பொருட்களை வீட்டுள் நிரப்பும் கைங்கரியமும் முதலைகளுக்குப் போதிக்கப்பட்டன. பாம்புகள் கூட்டிய மாநாட்டுக்குப் பின் பெருந்தொகையினர் சேர்ந்து கொண்டு கலங்கடித்தது முதலை மாநாட்டில் தான்.


எல்லோரும் ஒன்றாயே கூட்டமாக இருக்கையில் உணவுகளுக்காக ஒருவரை ஒருவர் நாங்களே மாறி மாறிக் கிழித்துக் கொள்ள நேரும். அத்தோடு ஆபத்தின் முன் கிழிபட்ட முகத்தை ஒழித்துக் கொள்ளலும், தப்பித்தலும் சிக்கலை அளிக்கும். சிறு கூட்டமாகி வெவ்வேறு பகுதிகளை ஆளுமை செய்வது பற்றிய குழுவாக்கலும் நடந்து கொண்டிருந்தன.

கூர்மையற்றதாகத் தென்படும் பற்களும், கலங்கிய கண்களும் நெகிழும் மனமும், சாந்த முகமும் அவசியமாகத் தேவைப்பட்ட ஆயுதங்களெனவும் கண்களைத் திறந்து கொண்டு மிதந்து நகரும் பழக்கமும் பயிற்றப்பட்டன.

முதலைகளெல்லாம் பதுங்கி தங்கள் நிழலை தாங்களே தின்று ஊருக்குள் நகரத் தொடங்கின.

– – – – –





இது எழுதி முடிக்கையில் வயிறும், கன்னமும் பருத்து, இறக்கை முளைத்துப் பறந்து திரிந்த முதலைகள் மட்டுந் தான் தென்பட்டன.

பிற்குறிப்பு:-

(இரகசியம் பேண்க)

இப்போது குழந்தை முதலைகள்கூட பிறக்கும் போதே இறக்கையுடன் பிறக்கின்றன.

முதலையாய்ப் பிறக்க வரம் வேண்டி எட்டாயிரத்து முந் நூற்று நாற்பத்து நால்வர் நுனி விரலில் நின்று தவம் புரிந்து கொண்டிருந்தனர்.

அவைகளுக்கே சகல தலைமைப் பதவிகளையும் ஒப்படைப்பதென ஆலோசனை நடத்தப்பட்டது.

இவ்வாறே ஊர் பேசிக் கொண்டது.

○



## ஏவிவிடப்பட்ட கொலையாளி

பாலம் 150 மீற்றர் எனவும், பாம்புக் கூட்டத்தின் மொத்த நீளம் 200 மீற்றர் எனவும் கொள்வோமானால் ஒரு சதுர மீற்றருக்கு 100 என எடுத்தாலும் 30,000 பாம்புகள். இங்கு இன்னமும் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். இவற்றைக் கனவளவாகப் பார்க்க வேண்டும். ஏனென்பதை நீ அறிவாய். எப்படியாகிலும் 50,000 சர்ப்பங்களைக் கொண்ட மாநாடாய் இருக்கும்.

**திசேரா**

ISBN : 978-955-0054-01-5

9 789550 054015

sirahununi